ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 9	விக்ருதி ஞு ஐப்பசி மீ	ஸஞ்சிகை 10

"அஹோபிலே கருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

———:o:———

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபதபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9–ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

யோக ஸமாதிக்கு விக்நம் வருமென்று பயப்படவேண்டாம். இப்பொழுது,

" ப்ரத்யக்தத்வஸ்தசேதா: நஸுப்ரவ ப்ரத்யூஹஸம்ஸித்தப்ரஸக்தை:
க்ஷுத்ரை: கேவலங்க்ராம்யாப நவரஸரஸைர் மந்த்ர நாக்ருஷ்டயே: ।
முக்த்வா ஸங்கவாடிகாவிபடநய்வா நப்ரதிஸ்ருந்நிக்ரஹை:
ஸம்யக்ஷீக்ருதஸ்த்வமேவ மூர்த்திஸ்ஸம் மஞ்ஜுயுக்திம் விததி ॥ "

யோக த்யாநத்திற்கு மந்த்ரங்களின் ஜபம் மிகவும் உபயோகமென்பது, 'தஸ்ய வாசக: ப்ரணவ:' 'தஜ்ஜபஸ்ததர்த்தபாவநம்' என்ற யோக ஸூத்ரங்களால் விளக்கப்பட்டது. ப்ரணவம் என்னும் ஸர்வோத்க்ருஷ்டமான ஈச்வர வாசக மந்த்ரத்தை ஓயாமல் அர்த்தாநுஸந்தாந பூர்வமாக ஜபிப்பது யோகத்திற்கு ஸுலபமான உபாய மென்று கூறப்பட்டது. திருவஷ்டாக்ஷராதி மந்த்ரங்கள் ப்ரணவத்தையும், இன்னும் அதிகமான அம்சங்களையு முடையன. பகவத் த்யாந யோகஸித்திக்கு அந்த மந்த்ரங்கள் மிக்க வேகமான ஸாதநமாவது பின்பாதியில் இங்கே விளக்கப்படுகிறது. க்ஷுத்ர (சில்லரை) மந்த்ரங்கள் அணிமா முதலிய ஐச்வர்ய ஸித்தியைத் தரலாம். அந்த மந்த்ரங்களில் இழிவது வீண் போதுபோக்கேயாம். அவை ஐச்வர்ய ஸித்திகளில் ஆசைகாட்டி மோக்ஷ ஸித்தியைக் கெடுத்துவிடும். அந்த ஸித்திகள் 'நான் வருகிறேன்; நான் வருகிறேன்' என்று ஓடிவரும். உயர்ந்த மந்த்ரங்களும் எல்லாப் பயன்களைக் கொடுக்கவல்லவை. ஆதலால் அந்த மந்த்ர ஜபங்களில் மற்ற ஐச்வர்ய ஸித்திகள் வருவதாயிருந்தாலும் அவற்றில் கண்ணோட்டம் கூடாது; அவற்றைத் திரஸ்கரிக்கவேணும். யோக ஸூத்ரத்திலும் இந்த ஸித்திகள் மோக்ஷ கைவல்ய ஸித்திக்கு அந்தராயங்கள் (விக்நங்கள்) என்று கூறப்பட்டது. இங்கே 'ப்ரத்யூஹ' என்பதால் அந்த விக்நங்களைக் கூறும் யோக ஸூத்ரங்கள் ஸூசிக்கப்படுகின்றன. அவை ப்ரத்யூஹங்களான (விக்நங்களான) அணிமா முதலிய ஐச்வர்ய ஸித்திகளைத் தருவன.

'ஸ்தாந்யுபநிமந்த்ரணே ஸங்கஸ்மயாகரணம் புநரநிஷ்டப்ரஸங்காத்' என்ற யோக ஸூத்ரத்தை இங்கே முன்பாதியில் ஸ்வாமி நினைக்கிறார். 'ஸ்தாநி' என்பது ஒரு ஸ்தாநத்தில் அதிகாரத்தி லுள்ள தேவரைச் சொல்லுவது 'உபநிமந்த்ரணே' அந்த அதிகாரி தேவர்கள் 'என்னிடத்திற்கு வாரும்; இங்கே திவ்ய போகங்கள் உள்ளன; இங்கே வந்து அநுபவியும்' என்று அழைக்கை

யில், 'ஸஜூஸ்யாகரணே' அதில் ஸங்கத்தையும் (ஆசையையும்) ஸ்மயத்தையும் (தேவர்கள் இப்படி நம்மை அழைக்கிருர்களே என்ற கர்வத்தையும்) அடையாம லிருக்கவேணும். 'வுநாநிஷ்டஸஜாக' எனெனில்: திரும்பவும் அநிஷ் டங்கள் ஆவ்ருத்திக்கு மாகையினல். இவற்றில் ஆசைப்படுவது நம்மை மோக்ஷ ஸமாதி யோகத்திலிருந்து நழுவச் செய்வது திண்ணம். இந்தப் பெரு மைகளில் ஆசையால் இழுக்கப்படாமலிருக்கவேணு மென்பதை 'கமெநூ: கநாகரூஷயீ:' என்று கூறுவது. இவை எதற்கு தடை செய்வது? ஆுதூக் க்வஸதக்வெஷநஸவத்திற்கு. 'ததஃ ஆுதூக்லெநாயிமஃ, கஷாயாஹா வஸ' என்கிற யோக ஸூத்ரத்தை இங்கே ஸ்வாமி நினைப்பது திண்ணம். 'ததஃ'—ஈச்வரனை த்யாநம் செய்வதிலிருந்து ப்ரத்யக் சைதந்யத்தின் இன்பாநு பவம் ஸித்திக்கும். விக்நங்கள் வரமாட்டா. கேவல ஆத்மாநுபவத்தை அவர் கள் நினைப்பது. 'தத்வம்', 'ஸதத்வம்' என்ற இரண்டு பதங்களும் 'முடிவான உண்மை' என்ற ஒரே பொருளையுடையவை என்பர். 'தக்வஸதக்வள வயஜாயள கபாயிதக்வவஅநள.' 'ப்ரத்யக்' என்பது தானே தனக்கு ப்ராகாசிக்கும். இது ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவிற்கும் பொது. நம் ஸ்வரூபமும் ப்ரத்யக் தத்வம்; அதைப்போலவே பரமாத்மாவும் ஒரு ப்ரத்யக் தத்வம். ஜீவர்களுடைய ப்ரத்யக் ஸ்வரூபம் அவரவர்களுக்குமட்டும் ப்ரத்யக். பரமாத்மா வெனும் ப்ரத்யக் ஜீவ ப்ரத்யக்குகளுக்கு முள்ளான ப்ரத்யக்கு; எல்லா ஜீவர்களுக்கு முள்ளான ஸர்வாந்தர ப்ரத்யக். அது தான் தானுகவே ஸ்வதந்த்ரமான நிலையுள்ள வஸ்து ஜீவ ப்ரத்யக்குகள் தனித்து ஸ்வதந்த்ரமாகத் தானுகவே நிலையுள்ளன வல்ல; ஸர்வ ப்ரத்யக்கான ஸர்வாந்தர்யாமியை விட்டுப் பிரிந்து நிற்கக்கூடியவை யல்ல. இவற்றின் வஸ்துத்தன்மையே பரமாத்மாதீநம். அவ னன்றியில் ஸ்திதி யற்றவை; அப்ருதக்ஸித்தம். இந்த ஜீவ ப்ரத்யக் தத்வங்களுக்குள் உண்மை யான பர்யவஸிதமான ஸ்வதந்த்ர உண்மையான முடிவு உண்மையான ப்ரத் யக்கு ஸர்வாத்மாவே. ஸர்வ ஜீவ ப்ரத்யக் தத்வங்களுக்கும் ஸதத்வமாய் முடிவு உண்மை தத்வமாயிருக்கும் பரமாத்மாவான ப்ரத்யக் தத்வ மென்பது, 'ப்ரத்யக் தத்வ ஸதத்வ' என்பதின் பொருள். ப்ரத்யக் தத்வங்களைத் தன் பிரியாச் சேர்க்கையால் தத்வமாகச் செய்யும் உள் தத்வம். உயிர்களை உயிராக்கும் தத்வம். இது உள்ளே உயிராக நிற்காவிடில் இந்த உயிர்களுக்கு உயிரே யிராது. இப்படி உயிர்தரும் உயிர் தத்வத்தை அறிவது எல்லையற்ற ஸுகத்தைத் தரும். நமக்கு உயிரளிக்கும் உயிர் தத்வத்தை யறிந்தால் அது ஸுகமாகத் தானே இருக்கும்.

'நிரவயிநிய தஸ ஆுகாயஜுஷரஷி:'
'ஷிஸெஷெஹாதஹாவெ க்விஹ நஹிவடிதெ தக்வநிஷ்க்வஷரஷி:'

என்ற ஸாராவளீ நிஷ்கர்ஷங்களை நினைக்கவேணும். "ஹமவதிஹாளஆுதூ தக்வாஞா கமி நிஹஜாஆுஸரஉஸயாயாராகாரா ஆுஸீஉதமெஉஷீ" என்ற ஶதஜூஷணீ 21-வது வாத மங்கள ச்லோகம் இப்பொருளுக்குச் சான்று கும். அந்த உள் உயிர் எல்லையற்ற ஆநந்தமான தத்வம். நம் உயிருக்கு உயிர்; ஆநந்த கநப் பொருள். இவ்விரண்டு ப்ரகாரங்களாலும் அதன்

வேதநம் (அறிவும் அநுபவமும்) எப்படி ஸுகமல்லாம லிருக்கும்? அதனி லும் மேலான ஸுக மெப்படி இருக்கக்கூடு மென்று கருத்து. இந்த ஸர்வ ப்ரத்யக்கான ஆநந்த ப்ரஹ்ம ஸாயுஜ்ய ஸுகத்தை விட்டு விட்டு, 'வா வா' என்று அழைக்கும் தேவர்களின் ஸாயுஜ்யத்தை யார் கண்ணெடுத்துப் பார்ப்பர் என்று கருத்து. மற்ற தேவ ஸாயுஜ்யங்கள் இந்த நிரதிசயாநந்த ப்ரஹ்ம ஸாயுஜ்யத்திற்கு இடையூறே. தேவர்கள் நமக்கு ப்ரத்யக்கான உள் உயி ராக மாட்டார்கள். அவர்கள் நம்மை உத்தேசித்துப் பராக்கே; பாஹ்யரே; வெளிப் பட்டவரே.

ச்லோகத்தின் பின் பாதியில் உத்க்ருஷ்டமான மூல மந்த்ராதிகளின் ஜபத்தின் ப்ரபாவம் அத்புதமாக வர்ணிக்கப்படுகிறது. என்ன ப்ரபாவம் நாம் அந்த மந்த்ரங்களை மனதால் நினைத்து உச்சரிப்பதற்காக வாயைத் திறக்கை யிலேயே மோக்ஷ வீட்டின் த்வாரக் கதவு (முக்தி த்வாரகவாடிகை) திறந்து விடுகிறது. அந்தக் கதவு திறக்கும் சப்தத்திற்கு, நம் வாயில் பின்பு வரும் மந்த்ரோச்சாரண சப்தம் எதிரொலியே போன்றதென்று சொல்லலாம். நம் வாய் திறக்கும் தக்ஷணத்திலேயே மோக்ஷக் கதவு திறந்து விடுகிறது. அந்தக் கதவு திறக்கும் சப்தத்திற்குப் பிறகுதான் நம் வாயில் மந்த்ர சப்தத்தின் ஒலி கேட்பதால் இது அதன் எதிரொலி என்று உத்ப்ரேக்ஷை. 'நாவாயி லுண்டே நமோ நாரண வென்றோவா துரைக்கும் உரை யுண்டே' என்ற பாசுரத்தை இங்கே ஸ்வாமி நினைப்பது திண்ணம். இந்த ச்லோகத்தை ஒருவாறு அநுஸரித்து, ஸ்ரீ வித்யாரண்யருடைய சிஷ்ய வர்க்கத்தைச் சேர்ந்த அபிநவபட்டபாணர் வேம பூபால சரித்ரத்தில்

"உத்கீர்ண கவாடவிவட நக்ஷம் ஸ்மரணாத் நத்தே முக்திகாந்திஸுத்ய
ஸம்வாஹநத் யோதிதாத் ஸத்யைவதிவ்யோகணை: ஸ்ரீஜத:"

என்று கூறியுள்ளார். நாராயணனை நினைதத மாத்ரத்திலேயே தக்ஷணமே அந்த நினைவு மோக்ஷ வீட்டுத் கதவைத் திறக்கும் திறவுகோலாகத் திறந்து விடும். 'ஸ்ம்ருதிஸஹஸ்ர ஸங்காரணி:' 'ஸ்ம்ருதிவதிபிரோஹக்ஷணம்' என்ற இரண்டாம் அங்க ச்லோகங்களையும் அநுஸரித்தார். 'ஸநகஸநந்த நாதிபி: ஸமிபி: ப்ரதீத்யஸாஹாவ்ருதா நஹிஸ்:' என்று அதே வாக் யத்தில் முதலில் கூறியதும் இந்த ச்லோக நினைவைக் காட்டும். 'மாயா ஸூராமதாவொ உயத விதயதாம்' என்று அந்த க்ரந்தத்தின் முடிவு ச்லோகாரம்பம்.

ஸுயத்ரக்ஷீகர தஸ்ரூயை:—முக்திக்கு நேரான ராஜமார்க்கத்தை ஸன்மார்க் கத்தைக் கண்கூடாகக் காட்டும் மந்த்ரங்கள். இம்மந்த்ரங்களின் ஜபத்தால் ஸந்தோஷத்தையும் தைர்யத்தையும் அடைகிறான். 'த்ருதி' என்பது ஸந்தோ ஷத்தைக் குறிக்கும்.

விவேக ராஜர்:—புருஷனை வீடு சேர்க்கும்வரையில் நான் நிம்மதியாய்த் தூங்கமாட்டேன்.

“ கூாஊா தக்ஷஊதீத்ரூ கொவஊஹநம் நிவஃாவ்ருவிதஸ்ரஹா
வெதாஸீம் வ்ருவயஅ்ய வாஸுவகயூாஶதஃம் வஊஃதீயஃஅ ।
ஸஜொத்தம்ஸி தவாஸ் நாஸஹஅஶஸம்ஸாஶகாஶாகூஃடீ
நிஷ்காஷீகூ ஊவாஃகாம் தநஃஊநஃஷிஹொஊஃநிஃ கூஷாஊ்ருதி ॥”

‘ஶூதஹஂம்’ என்பதற்கு நோய், வெப்பம், பயம் (சங்கை) என்று மூன்று பொருளுரைத்தது அமரம். காமம் இம்மூன்று மாகும். கிழத்தனம் வந்து சக்தியற்றே போனாலும் ஆதங்கம் விடுவதில்லை. காமமெனும் ஆதங்கத்தைத் தாண்டி. கோபம் என்பது மண்டி எரியும் அக்நி. அது தன்னையே கொளுத்தும் அக்நி. தன்னைக் கொளுத்திப் பிறரையும் அது கொளுத்தும். ‘ஶூஶ்ருயாஶஃ’ (ஆச்ரயத்தையே எரித்துக் கொல்லுவது) என்று நெருப்புக்குப் பெயர். இந்த நெருப்பை சாந்தி ஜலங்களால் அணைக்கவேணும்.

விதஸ்ரஹா—என்பது பொருளாசை; மேன்மேலும் பணத்தைக் குவிப்பதில் ஆசை. இந்த ஆசையை வேதாளம் என்றார். வேதாளத்திற்கு மேலும் மேலும் அது கேட்டதைக் கொடுத்து அதன் வயிற்றை நிரப்பிக்கொண்டேயிராவிடில் அது விழுங்கிவிடும். பண ஆசை மேல்மேல் விரும்புவதையெல்லாம் பாடுபட்டுத் தேடிப் பூரித்துக்கொண்டேயிருக்கும்படியில்லாவிடில், அது நெஞ்சை ஒடித்துக் கொன்றுவிடும். இந்தப் பணத்தாசையாகிற வேதாளத்தையும் தூர விரட்டிவிடவேணும்.

புத்ர களத்ராதி பந்துக்கள் ஒரு பள்ளக் குழி. அந்தக் குழியைத் தாண்டி விடவேணும்; உள்ளே விழுந்தால் வெளிக் கிளம்புவது கஷ்டம். இத்தனைக்கும் ‘ஸத்ஸங்கம்’ எனும் நல் வாஸனைத் துணை வேண்டும். இந்த வாஸனை த்ருடமாயிருந்தால், தேஹத்தோடு கூடியிருப்பதும் ப்ரஹ்மாநந்தாநுபவத்திற்கு உதவியே யாகும். “ ஸம்ஸ்ரஜ்ருதெயஷி அஃாஸஜநஸ்வதீயஃ ஸம்ஸாஶணஷஹஶ வநவவஶஃணவ” என்று ஸ்வாமி பேரருளாளர் ஸ்தவத்தில் பாடியதை நினைக்கவேணும். நல் வாஸனை நிரம்பியிருந்தால் இந்தக் தேஹத்தை ஸம்ஸார முள்ளுக்காட்டில் முள் குத்தாமல் ஸஞ்சரிப்பதற்குப் பாதரக்ஷையாக உபயோகப் படுத்தலாம். தேஹத்தைச் செருப்பைப்போல் நினைக்கவேணும். வெளியே ஸஞ்சரிக்கையில் செருப்பு. உள்ளே பரமாத்மாவிற்குள் புகும்பொழுது தேஹமெனும் செருப்பைக் கழற்றிவிட்டுக் கேவல ஆத்மாவாய் உள்ளே புகவேணும். தூக்கத்தில்போல ஸமாதியிலும் தேஹத்தை மறந்து பரமாத்ம ஸம்ச்லேஷ இன்பம் பெறலாம். ஸம்ஸார மென்பது காராக்ருஹம். அந்த காராக்ருஹத்தை விட்டுவிட்டு வெளிக் கிளம்பி, பரமாத்மா வெனும் பர்யங்கத்தில் புகுமுன் தேஹ மெனும் செருப்பைக் கழற்றி யெறியவேணும். பாதுகா ஸஹஸ்ரம் ச்ருங்கார பத்ததி முதலில்

“ ஶளஞெஃ ஶ்ருஜாஶஞெஷா நாம் வூஸஅதிம் வாஃகாம் ஹஜெ ।
யாஜெஷஹஃஜெஶஃஸாஞாகி வஷிவஃம் வஶூாஃவி வூஹஃ ॥ ”

என்று பாடியதை நினைக்கவேணும். பாதுகையைக் கழற்றிவிட்டுத் திவ்ய தம்பதி மிதுநத்திற்குப் பர்யங்காரோஹண ஸம்ச்லேஷம். அப்படி, செருப்புப்

தமிழ்நாடு [stamp]

போன்ற தேஹத்தை விட்டுவிட்டு, அதிலிருந்து கிளம்பிப் பகவத் பர்யங்கம் ஏறி ஸம்ச்லேஷம் பெறவேணும். தேஹ நினைவு ஒழிந்துதான் நித்ரையில் பகவத் ஸம்ச்லேஷம். தேஹமும் அதன் நினைவும் பகவத் ஸம்ச்லேஷ விரோதிகள். 'ஏஷ ஸம்ப்ரஸாதோ(அ)ஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய' என்ற ச்ருதி, 'தேஹத்தை விட்டுக் கிளம்பி நாராயண பரஞ்ஜோதியில் புகுந்து' என்று பாடிற்று. தேஹம் காராக்ருஹ மாயினும், இதை ப்ராரப்தம் முடியும் வரையில் ப்ரஹ்ம வித்துக்களான முநிகள் பொறுக்கிறார்கள். 'தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே' என்று ஸத்வித்யை பாடியபடி, தேஹ மெனும் காராக்ருஹக் குடிசை விழுந் தழிவதை ப்ரதீக்ஷிக்கிறார்கள். 'குடிசை' யென்பதால் இது சில வர்ஷங்களில் தீக்கிரையாகு மென்னும் ரஸத்தைக் குறிப்பது. இந்த ச்லோகம் ஸாராஸ்வாதியில், இதன் அடுத்த ச்லோகமாகிய 'ஸ்வாபோத்போதாயவஸ்தா' என்கிற ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகார முடிவு ச்லோகத்தின் அவதாரிகையில் உதாஹரிக்கப்பட்டது.

வ்யவஸாயர்:—மஹாராஜரே! இனி சங்கை வேண்டாம்.

"ஸ்வாபோத்போதாயவஸ்தா விஹ ந ஸமயதோ மோக்ஷஸாதநாநாம்
காயம் க்லிஷ்டம் ஜஹதி விதிநா கேசிதத்ர ஸ்வாவஸ்தா நா: ।
தஸ்மாத் வாஸ்யாஸு தீவிஷயே ஸ்வாத்ம தாம் ஸ்வநிஷ்டாம்
சேஷாம் குரவோ சிரஸி குர்வதி சேஷமாயும் நயந்தி ॥"

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரத்தில் இது முடிவு ச்லோகம். மோக்ஷோபாயநிஷ்டன் தேஹ முள்ளவரையில் இருக்கவேண்டிய நிஷ்டையை இது வர்ணிப்பது. 'ஸ்வாபம்' என்பது தூக்கம். அநாதி மாயா நித்ரையான அஜ்ஞாந தசையையும் இதுகுறிக்கும். உத்போதம் என்பது விழிப்பு நிலை; இது ஜ்ஞாந நிலையையும் குறிக்கும். உத்போதம் என்பதில் 'உத்' என்பதும் சேர்ந்திருப்பதால், ஸம்ஸாரத்தை விட்டுக் கிளம்பியபின் விண்ணுலகாநுபவத் தெளிவையும் குறிக்கலாம்.

"யா நிசா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ ।
யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிசா பச்யதோ முநே: ॥"

என்று பகவான் தூக்கத்தையும் விழிப்பையும் வர்ணித்ததை நினைக்கவேணும். தூக்கத்திற்கும் விழிப்புக்கும் நடுவிலுள்ளது 'ஸந்த்யம்' எனும் ஸ்வப்ந நிலை. மோக்ஷோபாயநிஷ்டன் அஜ்ஞாநத் தூக்க நிலைக்கும் விதேஹ கைவல்யமான மோக்ஷ ஞான விழிப்பு நிலைக்கும் நடுவி லிருப்பவன். போகம் என்பது ப்ராரப்த கர்ம போகம். 'போகேந த்விதரே க்ஷபயித்வா அத ஸம்பத்யதே' என்கிற மோக்ஷாத்யாய முதல் பாதம் கடைசி ஸூத்ரத்தை நினைவூட்டுகிறது போக சப்தம். மோக்ஷோபாய நிஷ்டனான ஜ்ஞாநியை உடனே மோக்ஷ வீடு சேர்த் துக்கொள்ளக்கூடு மானாலும், இவனைக்கொண்டு பிறருக்கு உபதேசங்க ளாலும் க்ரந்த ரசநத்தாலும் ஜ்ஞாநத்தை ஊட்டுவதற்காகவும், ஜ்ஞாநிகளின் நிலை இன்னதென்று உலகத்திற்கு இவனைப் பார்ப்பதாலேயே தெளிவிப்பதற்காகவும் இவனை இங்கே பகவான் தன் ஸங்கல்பத்தாலேயே நிறுத்தி வைப்பது. 'சிறிது

காலம் ஏதோ அவனுடைய ஒரு ஸங்கல்ப விதியினல் இந்த ஜகத்தில் இருக்கும் படி ஸ்தாபிக்கப்படுகிருர்கள்' என்று இரண்டாம் அடி. விதிவஶாத்-என்பதினல், 'பகவத் க்ருபையாலே ப்ரஹ்ம வித்துக்களை லோகத்தைத் திருத்துவதற்காகச் சில காலம் பூமியில் இருத்திவைக்கு மென்னும் அர்த்தம் ஸூசிதம்' என்று ஸாரதீபிகையும், 'ஶூாஸ்ரூவாஜ௯ஃதெ௩' கெநாவி ஹாஜூவிஶெஷெண' என்று ஸ்ரீஸாராஸ்வாதிநியும், 'ஶூாஸுகஉவஶெ௩' என்று ஸ்ரீஸாரப்ரகாசிகா ஸார விவரணீ ஸாரஸங்க்ரஹங்களும் பொருளுரைத்தன. இவரைக்கொண்டு பலரைத் திருத்தவேண்டு மென்று ப்ரவஹிக்கும் பகவத் க்ருபை இவருக்குப் பாக்யமும் இவரிடம் க்ருபையு மாகும். ப்ரஹ்லாதர், 'நான் ஒருவன்மட்டும் மோக்ஷ மடைய விரும்பவில்லை; பலரைத் திருத்தி ஜ்ஞாநிக ளாக்கியபின்பே உம்மிடம் வர ஆசை' என்று ந்ருஸிம்ஹப் பெருமாள் அழைப்புக்குப் பதில் கூறினர். இந்தக் கைங்கர்யத்திற்காக மோக்ஷ விளம்பம் எனக்கு இஷ்டமே என்ருர்.

> " ஸுயஜூாதீஹ நூஙிஉஃாணஉஶெநகெஷாம் அஶொய நஃ ।
> ஸஅஃாவிஹ ஹஶெவாது தெஷாஶெதூநஹஹீயஃ ॥ "

என்ற வசநமும் உதாஹரிக்கப்பட்டுள்ளது. தத்வம் உபாயம் முதலியவற்றில் (ப்ரப்ருதி) என்பதால் புருஷார்த்தத்தைக் கொள்ளவேணும். இந்த விஷயங் களில் ஸ்வாமியால் அளிக்கப்பட்ட ஆஜ்ஞையாகிய 'ஶேஷா' என்னும் பரிவட்டத்தை ஶிரஸில் தரித்துக்கொண்டே பாக்கி ஆயுஷ்காலத்தை இன்ப மாய்க் கழிப்பர். இந்தப் பாதியிலுள்ள பதங்கள், உத்தவருக்கு ஏகாதசம் 27-வது அத்யாயத்தில் பகவான் வைதித தாந்த்ரிகாதிகளைக் கலந்து பகவதாரா தந நிஷ்டையை விஸ்தாரமாக உபதேசித்து 'உதிஶெஷாஂஶிரஸா உதூாஂ ஶிரஸாஉஉ தாய ஸாஉரூஂ' என்று முடிவில் கூறியதை அப்படியே அநுஸரிக்கின்றன வென் பதை ப்ரபாவிலாஸ வ்யாக்யாநத்தில் ஸ்ரீ அஹோபில ஸ்வாமி எடுத்துக் காட் டியது மிக்க ரஸம். 'ஶேஷா' என்பது ஓர் கைங்கர்யத்திற்கும் மர்யாதா புரஸ் ஸரணத்திற்கும் அருளிப்பாடிட் டழைத்துத் தலையில் கட்டும் பரிவட்ட மாலை இவைகளைச் சொல்லும். அவன் உடுத்துக் களைந்த ஆடைகளையும் அவன் சூடிக் கழித்த மாலைகளையும் கட்டுவது.' தெைவா தாவஹஜி ஹீஷ்ஷு ஸூ ஶெஷா' என்ற நிகண்டு உதாஹரிக்கப்பட்டுளது. 'பரமபத ப்ராப்திக்கு அருளிப்பாட்டில் பரிவட்டமாக ஶிரஸா வஹித்துக்கொண்டு தஉநுகுணமாக ஆயுஶ்ஶேஷத்தைக் கழிப்பார்கள்' என்று ஸாரதீபிகை இந்த ச்லோக பாவத்தைத் தமிழ் செய்தது. இங்கே இந்த மத்ய காலத்தை ஸ்வபநத்திற்கு ஒப்பிட்டதில் மிக்க ரஸ முண்டு. ஸ்வப்நத்தில் அநுபவிக்கப்படும் பொருள்க ளெல்லாம் கேவலம் பகவத் ஸ்ருஷ்டங்கள்; பகவத் தத்தங்கள். அங்கே நம்முடைய தேஹம் இந்த்ரியங்க ளெல்லாம் பகவானே அந்த க்ஷணகாலத்திற்கு ஸ்ருஷ்டித்து நமக் குக் கொடுப்பது. அந்த வ்யாபாரங்க ளெல்லாம் கேவலம் பகவததீநம். நம்மு டையதே யொன்றும் கிடையாது; எல்லாம் பரமபுருஷ ஸ்ருஷ்டம். பரமபுருஷ தத்தம் என்பது 'ஊயாஊதூஹு' என்கிற ஸூத்ர பதங்களின் பொருள் என்று ஸ்ரீ பாஷ்யம் காட்டியது. நம் இந்த்ரியங்கள் தூங்குகின்றன. கண்

கள் மூடி யுள்ளன. ஆயினும் பார்க்கிறோம். பகவான் தத்காலத்தில் கொடுத்த கண்களைக்கொண்டு பார்க்கிறோம்; காதுகளால் கேட்கிறோம்; கை கால் உடம்புகளால் வ்யாபரிக்கிறோம். 'ஸ்வப்நத்தில் போல விழிப்பு தசையிலும் எல்லாம் அவனதே; அவன் அதீநம்; நாம் கேவலம் பொம்மையைப்போல நடத்திவைக்கப்படுகிறோம்' என்கிற அந்த ஸ்வதந்த்ராதீநத்வம் எப்பொழுதும் அநுபவிக்கப்படவேணும். நாம் அறிவுள்ள பொம்மைகள்; அத்யந்த பரதந்த்ரர்கள். ஸந்த்யாதிகரணத்தில் அதிகரணஸாராவளியில், 'ஜ்ஞாநஸ்ய ஸ்வாதந்த்ர்யாவதிரவஸ்தாஜ்ஞாநயோ தைவதந்த்ரா' என்ற ச்லோகத்தின் உரையில் பத யோஜனை, 'ஸ்வப்நாவஸ்தாவத் ஸகலாவஸ்தாஸு விஜீவஸ்யாவஸ்த ப்ரயா சோத்யமாநவிஷயாதீநவ்ருத்தாந்த ஏவ ஸர்வதா ப்ரவ்ருத்தி:' என்று கூறியதையும் நினைக்கவேணும். தலையில் கட்டிய ஆஜ்ஞா பரிவட்டம் தேஹம் விழும் வரையில் அவிழக்கூடாது. 'க்ருதிந:' என்பதற்குப் 'பாக்யவான்கள்' என்று பொருள். ஸேவையினால் ஆயுஶ்ஶேஷத்தைக் கழிக்கிறார்கள்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

வேதாத்யயநம்

[ஸ்ரீ. உப. மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர்,
ஸ்ரீ. அ. மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்]

லக்ஷ்மீந்ருஸிம்ஹ சரணாம்புஜமத்தப்ருங்கோ
ஹேவாகிமாநஸ ஸமாச்ரிதஹம்ஸராஜ: ।
நித்யம் ச்ரிதாஸமவதம்ஸித ஸத்வயோ ச
ஸ்ரீரங்ககாரிஜகந்த ஹ்ருதயே அகாஸ்த ॥

ஒரு மனிதன் ச்ருதி ஸ்ம்ருதிகளால் சொல்லப்பட்ட தர்மத்தை அநுஷ்டிப்பதால், அவன் இவ்வுலகில் நல்ல கீர்த்தியை யடைவதுமன்றி, லோகாந்தரத்திலும் மிகவும் உத்தமமான ஸுகத்தை அடைகிறானென்று

" ச்ருதிஸ்ம்ருத்யுதிதம் தர்மமநுதிஷ்டந் ஹி மாநவ: ।
இஹ கீர்த்திமவாப்நோதி ப்ரேத்ய சாநுத்தமம் ஸுகம் ॥ "

என்கிற ச்லோகத்தால் மநு சொல்லுகிறார். ஸாதாரணமாக இவ்வுலகில் பிறந்தவனுக்கு இறப்பு நிச்சயம் என்பது ப்ரத்யக்ஷ ஸித்தமான விஷயம். இறப்பு என்பது இந்த ஸ்தூல சரீரத்தின் வியோகமே தவிர, அந்த ஶரீரத்தி னுள்ளிருக்

கும் நித்யமான ஆத்மாவின் அழிவன்று' என்பது ஆஸ்திக மதம். ஒரு மனிதனுக்கு இங்கு உயிருடனிருக்கும்போது மாதா பிதாக்களோ, பந்துக்களோ, தநமோ, ஸஹாயமாயிருப்பினும், சரீர வியோகமேற்பட்டபின்பு, அந்த பந்துக்களோ தநமோ ஸஹாயமாக இருப்பதில்லை. இவர்கள் சரீரநாசமேற்பட்டவுடன் அவர்கள் இவனை விட்டுவிடுகிறார்கள். இவனால் செய்யப்பட்ட தர்மம் மாத்ரம் இவனுடன் செல்லுகிறதென்றும், ஆகையினால் பரலோகத்தில் ஸஹாயத்திற்காகத் தர்மத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்றும் சாஸ்த்ரங்கள் உத்கோஷிக்கின்றன. தர்மத்தை அநுஷ்டிக்குங் காலத்தில் காலதேச வைகுண்யத்தினால் அநேக க்லேசங்கள் ஏற்படுவது ஸஹஜமேயாகிலும், அவைகளைக் கூடியவரையில் ஸஹித்துக்கொண்டு ஸ்வதர்மத்தைச் செய்வதுதான் நல்லது. இப்படி அநுஷ்டிக்கவேண்டிய தர்மத்தின் தெளிவு வேதத்தினாலும் ஸ்ம்ருதி என்கிற தர்மசாஸ்த்ரத்தினாலும் ஏற்படுகிறது. ஆகையினால் தர்மாநுஷ்டாநம் செய்வதற்கு முன்பு வேதத்தைக் கற்பது இன்றியமையாததாகிறது.

வேதாத்யயநம் செய்வது ப்ராஹ்மணனுக்கு முக்யமான தர்மமென்பது, 'ப்ராஹ்மணேந நிஷ்காரணோ தர்ம: ஷடங்கோ வேதோऽத்யேயோ ஜ்ஞேயஶ்ச' என்கிற ச்ருதியில் சொல்லப்பட்டது. அதாவது:—ப்ராஹ்மணன் த்ருஷ்ட ப்ரயோஜநத்தை அபேக்ஷிக்காமல் ஶிக்ஷா, வ்யாகரணம் சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்கிற ஆறு அங்கங்களோடு கூடிய வேதத்தை அத்யயநம் செய்து அர்த்தத்தையும் அறியவேண்டுமென்பது இந்த ச்ருதியின் அர்த்தம்.

"தபோவிஶேஷைர்விவிதைர்வ்ரதைஶ்ச விதிசோதிதை: ।
வேத: க்ருத்ஸ்நோऽதிகந்தவ்ய: ஸரஹஸ்யோ த்விஜந்மநா ॥"

[ப்ராஹ்மணன், பாதோப ஸங்க்ரஹணம் முதலிய நியமங்களுடனும், சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட வ்ரதங்களுடனும், ஸமஸ்தமான வேதத்தையும் உபநிஷத்துடன் அறியவேணும்] என்று மநு ஸ்ம்ருதி மேற்சொன்ன ச்ருதியின் அர்த்தத்தை உபப்ரஹ்மணம் செய்தது.

இப்படி ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளால் விதிக்கப்பட்டதாயும் ஸர்வ தர்மங்களுக்கும் மூலபூதமுமான வேதாத்யயநத்தை ப்ராஹ்மணன் செய்து, அதன் மூலமாய்த் தர்மங்களை அநுஷ்டித்து ஸமஸ்த ச்ரேயஸ்ஸையும் அடைகிறான். அப்படிச் செய்யாவிடில் ப்ராஹ்மணனுக்கு ம்ருத்யு பயமேற்படுமென்று

"யோऽநதீத்ய த்விஜோ வேதமந்யத்ர குருதே ஶ்ரமம் ।
ஸ ஜீவந்நேவ ஶூத்ரத்வமாஶு கச்சதி ஸாந்வய: ॥"

என்கிற மநு வாக்யத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் ப்ராஹ்மண குலத்திற் பிறந்தவனுக்கு 'கர்பாஷ்டமேऽப்தே குர்வீத ப்ராஹ்மணஸ்யோபநயநம்' என்கிறபடி யதாகாலம் முறைப்படி உபநயநம் செய்வித்து அவனை ஆசார்யனிடம் வேதாத்யயநம் செய்ய விடவேணும். 'ஷோடஶாப்தா ப்ராஹ்மணஸ்யாவஸாவித்ரீ

ஸாவித்ரீ' என்கிற கௌதம ஸ்ம்ருதியில், ப்ராஹ்மணனுடைய உபநயநத்திற்குப் பதினாறு வயதுவரையில் கௌண காலமாகச் சொல்லப்படுகிறது. அதன் பிறகும் அநுபநீதர்களா யிருப்பவர்கள் வ்ராத்யர்க ளென்றும், இவர்களுடன் ப்ராஹ்மணர்கள் ஆபத் காலத்திலும் அத்யாபந கந்யா தாநாதி ஸம்பந்தங்களைச் செய்யக்கூடா தென்றும்,

> "அத ஊர்த்வம் த்ரயோப்யேதே யதாகாலமஸம்ஸ்க்ருதா:
> ஸாவித்ரீபதிதா வ்ராத்யா பவந்த்யார்யவிகர்ஹிதா: ॥
> நைதைரபூதைர்விதிவதாபத்யபி ஹி கர்ஹிசித்।
> ப்ராஹ்மாந் யௌநாம்ச்ச ஸம்பந்தாநாசரேத் ப்ராஹ்மண: ஸஹ ॥"

என்கிற ச்லோகத்தினல் மநு சொல்லுகிருர்.

யதாகாலம் உபநீதனை ஆசார்யன் சௌசாசாரங்களை முதலில் சிக்ஷித்து ஸந்த்யோபாஸநத்தையும் சிக்ஷிக்கவேணும். பால்யத்தில் நிர்ப்பந்த புரஸ்ஸரமாக சௌசாசாரங்கள் சிக்ஷிக்கப்படாவிட்டால் பிறகு அவை வருவது கஷ்டம். ஸந்த்யோபாஸநத்தை யதாவத் அநுஷ்டிக்காதவன் எவ்வித வைதிக கர்மாக்களுக்கும் அநர்ஹ னென்றும், அவனுல் செய்யப்படும் கர்மாக்கள் வ்யர்த்தமாகு மென்றும் 'ஸந்த்யாஹீநோऽசுசிர்நித்யமநர்ஹ: ஸர்வகர்மஸு' இத்யாதிகளால் வ்யக்தம். நாம் அநுஷ்டிக்கும் ஸந்த்யோபாஸநம் முதலிய ஸகல வைதிக கர்மங்களும் வேத மந்த்ரங்களைக் கொண்டுதான் செய்யவேண்டியிருக்கிறது. அந்த மந்த்ரங்களை ஆசார்ய முகமாக நியமத்துடன் அத்யயநம் செய்து ஸ்வர வர்ண விபர்யாஸ மின்றி உச்சரித்து அநுஷ்டித்தால்தான் அவை சரியான பலனைக் கொடுக்கும். மந்த்ரமானது ஸ்வர வர்ணங்களுடைய வைபரீத்யத்தினல் விபரீத பலனைக் கொடுக்கு மென்பது

> "மந்த்ரோ ஹீந: ஸ்வரதோ வர்ணதோ வா மித்யாப்ரயுக்தோ ந தமர்த்தமாஹ।
> ஸ வாக்வஜ்ரோ யஜமாநம் ஹிநஸ்தி யதேந்த்ரசத்ரு: ஸ்வரதோऽபராதாத் ॥"

என்கிற சிக்ஷா வசநத்தில் அறிவிக்கப்பட்டது. அதாவது:—த்வஷ்டா என்பவரின் பிள்ளையான விச்வரூபனைத் தேவேந்த்ரன் கொன்றுவிட்டான். புத்ர சோகாதுரரான த்வஷ்டா இந்த்ரனுடைய நாசத்தை உத்தேசித்து ஒரு அபிசார யாகம் ஆரம்பித்தார். அந்த யாகத்தில் 'இந்த்ரசத்ருர்வர்தஸ்வ' என்ற ஒரு மந்த்ரம் ஊஹத்தினுல் ப்ராப்தம். அக்நியைப் பார்த்து, 'இந்த்ரனைக் கொல்லக்கூடிய புத்ரனுக நீ வ்ருத்தி அடையவேணும்' என்று ப்ரார்த்தனை மந்த்ரத்தின் அர்த்தம். இதில் 'சாதயிதி சத்ரு:, இந்த்ரஸ்ய சத்ரு: இந்த்ரசத்ரு:' என்று தத்புருஷ ஸமாஸமாக ப்ரயோகிக்கவேணும். அப்போது, 'இந்த்ரசத்ரு:' என்னும் பதம் அந்தோதாத்த மாகும். இப்படியிருக்க, த்வஷ்டாவின் யாகத்தில் இந்த மந்த்ரத்தை ரித்விக்கு ஆத்யுதாத்தமாக அநவதாநத்தினுல் ப்ரயோகித்துவிட்டார். அப்போது (இந்த்ர: சத்ரு: சாதயிதா யஸ்ய ஸ:) என்று பஹுவ்ரீஹி ஸமாஸமாகி 'இந்த்ரன் உனக்கு

(பிள்ளைக்கு) நாசகன்' என்று அர்த்தம் ஏற்பட்டபடியால், பிறகு த்வஷ்டாவுக்கு வ்ருத்ரன் என்கிற புத்ரன் ஜனித்து இந்த்ரனுடன் விரோதித்துக் கடைசியில் இந்த்ரனால் கொல்லப்பட்டு விட்டான் என்று சிக்ஷை கூறுகிறது. ஆகையினால் நாம் அநுஷ்டிக்கவேண்டிய கர்மாக்களின் மந்த்ரங்களை ஸஸ்வரமாகக் கற்றால்தான் விபரீத பலன் நேராமல் அபிமதமான பலன் கிடைக்கும்.

"न हायनैर्न पलितैर्न वित्तेन न बन्धुभिः ।
ऋषयश्चक्रिरे धर्मं योऽनूचानः स नो महान् ॥"

என்கிற ச்லோகத்தினால், மநு, ப்ராஹ்மணனுக்கு வயதினாலோ, தநத்தினாலோ, பந்துக்களினாலோ ஏற்றம் கிடையாதென்றும், ஸாங்க வேதாத்யயநம் செய்தவனே உயர்ந்தவனென்றும் கொண்டாடுகிறார். ஆகையினால் தான் 'यो वै युवाप्यधीयानस्तं देवाः स्थविरं विदुः' என்று மேலும் மநு, வயதில் சிறியவர்களாகிலும் ஸாங்க வேதாத்யாயிகளே பெரியோர்களென்றும், அவர்களை இதரர்கள் ப்ரணமம் செய்யவேணுமென்றும் சொல்லுகிறார். இப்படி அத்யயநம் செய்யாதவன்,

"यथा काष्ठमयो हस्ती यथा चर्ममयो मृगः ।
यश्च विप्रोऽनधीयानस्त्रयस्ते नामधारकाः ॥"

(எப்படி மரத்தினால் செய்யப்பட்ட யானையும் தோலினால் செய்யப்பட்ட மானும் அதன் கார்யத்திற்கு உபயோகமில்லையோ, அதேமாதிரி அத்யயநமில்லாமலிருக்கும் ப்ராஹ்மணனும் ப்ராஹ்மண கர்மாவுக்கு உபயோகமில்லாமல் கேவலம் பெயரை மாத்ரம் தரிப்பவன் என்று நிந்திக்கப்படுகிறான்.

ப்ராஹ்மணனுக்கு ப்ரஹ்ம யஜ்ஞம் என்கிற கர்மா முக்யமாக விதிக்கப்பட்டுள்ளது. 'यश्च श्रुतिजपः प्रोक्तः ब्रह्मयज्ञः स उच्यते' என்று காத்யாயநர் வேத ஜபத்தை ப்ரஹ்மயஜ்ஞமென்று சொல்லுகிறார். பைடீநஸி என்பவர்;

"स्वशाखाध्ययनं यत्तु ब्रह्मयज्ञं प्रचक्षते ।
ब्रह्मयज्ञवतो विप्रो ब्रह्मलोके महीयते ॥"

என்று அவரவர்களுடைய சாகாத்யயநத்தை ப்ரஹ்ம யஜ்ஞமென்றும், ப்ரஹ்ம யஜ்ஞம் செய்கிறவன் ப்ரஹ்ம லோகத்தில் கொண்டாடப்படுகிறானென்றும் சொல்லியிருக்கிறார். விஷ்ணு ஸ்ம்ருதியில்,

"ओंकारं व्याहृतीस्तिस्रो गायत्रीं च ततः परम् ।
उक्त्वैतानन्वाहृत्य वेदादीन् समभ्यसेत् ॥"

என்று வ்யாஹ்ருதித்ரய புரஸ்ஸரமாகக் காயத்ரீயை உச்சரித்துப் பிறகு வேதம் முதலானவைகளை ஆரம்பிக்கவேணுமென்றும் சொல்லப்பட்டிருக்

கிறது. ஆக, இந்த வசநங்களினால் ப்ரஹ்ம யஜ்ஞம் நித்யகர்மா வென்றும், அதில் ப்ரதாநமாக வேதத்தை (அதாவது : ஒரு ப்ரச்நத்தை) ஜபிக்கவேணு மென்றும் தெளிவாகிறது. 'ப்ரஹ்மயஜ்ஞவிஹீநஸ்ச ப்ரஹ்மஹா கீர்த்திதோ புதை:' என்று ப்ரத்யவாய ஸ்மரணத்தினால் நித்ய கர்மத்வம் த்ருடீக்ருத மாகிறது. இப்படி ப்ரஹ்ம யஜ்ஞ ப்ரச்நம் ஜபிப்பதற்கு அத்யயநம் ஆவச்யகமாகும். பூர்ண வேதாத்யயநம் செய்யாதவர்களோ, அல்லது வேதாத்யயநம் செய்து ப்ரஹ்மயஜ்ஞ ப்ரச்ந ஜபத்திற்கு அசக்தர்களோ, புருஷ ஸூக்தத்தை அதன் ஸ்தாநத்தில் ஜபிக்கவேணும். இந்த அர்த்தம்.

" ப்ரஹ்மயஜ்ஞே ஜபேத் ஸூக்தம் பௌருஷம் சிந்தயந் ஹரிம் ।
ஸ ஸர்வாந் ஜபதே வேதாந் ஸாங்கோபாங்காந் விதாநத: ॥"

என்று விஷ்ணு தர்மோத்தரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

" யம் யம் க்ரதும் அதீயீத தஸ்ய தஸ்யாப்நுயாத் பலம் ।
த்ரிர் வித்த பூர்ண ப்ருதிவீ தாநஸ்ய பலமச்நுதே ॥ "

என்று ப்ரஹ்ம யஜ்ஞத்தில் எந்தெந்த வேத பாகங்களை ஜபிக்கிறார்களோ அந்தந்த பாகத்தில் விதிக்கப்பட்ட யாகங்களின் பலனை அடைவார்க ளென்றும், மூன்றுதரம் தநத்தினால் நிறைந்த பூதாநத்தின் பலனையும் அடைவார்க ளென்று யாஜ்ஞவல்க்யர் சொல்லுகிறார்.

ப்ராஹ்மணன், தான் அத்யயநம் செய்த வேதத்தை ஒருக்காலும் மறக்க லாகாது.

" அதீத்ய வி யோ வேதம் விஸ்மரதி யதா நர: ।
ப்ரஹ்மஹா ஸ து விஜ்ஞேய: விஷ்ணோர் நிந்தயித்ருத்தி "

என்று வேதத்தை மறந்தவனுக்கு மஹாபாபம் சொல்லப்பட்டது.

" வேதமேவ ஜபேந் நித்யம் யதாகாலம் அதந்த்ரித: ।
தம் ஹ்யஸ்யாஹு: பரம் தர்மம் உபதர்மோऽந்ய உச்யதே "

என்று வேத ஜபத்தைக்காட்டிலும் உயர்ந்த தர்மம் கிடையா தென்கிறார் மநு. ஆகையினால் ப்ராம்ஹணர்கள் ஸாங்க வேதாத்யயநம் அவச்யம் செய்ய வேணும். தேஹ யாத்ரார்த்தமாக இதர பாஷைகளை அப்யஸித்தாலும், ஓய்வு நேரங்களிலாவது அத்யந்தம் ஆவச்யகமான புருஷஸூக்தம் உபநிஷத் முதலான பாகங்களையாவது யதாசக்தி அத்யயநம் செய்து ப்ராஹ்மண தர்மத்தை ரக்ஷிக்க வேண்டும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஜககண்ட்யம்

[ஆவணி மாஸத்து ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

முன் பாசுரத்தின் கடைசியி லுள்ள 'நணுகினம் நாமே' என்பதை இங்கேயும் சேர்த்து அந்வயித்து, 'இந்த ஶாண்டில்ய வித்யையில் சொல்லுகிறபடி ஸர்வாத்மாவான ப்ரஹ்மத்தை நாம் உபாஸிப்போம்; நணுகுவோம்' என்றும் பொருள் கொள்ளலாம். அல்லது மற்றப் பாசுரங்களிற்போல இங்கும் முடிவில் 'ஸர்வ ஶரீரியான அவன் சுடரடி தொழு—உபாஸி' என்று அந்வயிப்பதாலும், இந்தப் பாதத்தில் ஶாண்டில்ய, அந்தர்யாமி, வைச்வாநராதி வித்யைகளில் கூறிய ப்ரஹ்மத்தின் விச்வரூப ஸர்வாத்மத்வ ப்ரகாரத்தின் ஸார்வகாலிக அநுஸந்தாநத்தை விளக்குவதாகும். தைத்திரீயத்தில் நாராயணநுவாகத்தில், 'க: கிம் கம் தத்ஸத்யம் ஸர்வாத்மா ஜீவோ விஷ்ணு: கத: ஸ்வயம்பூ: ப்ரஜாபதி: ஸம்வத்ஸர இதி' என்று படித்தவிடத்தில், "க:, கிம், கம், கத: இதி ப்ரச்நாநாம் ஸர்வஸ்ய ப்ரத்யுத்தரம் தஸ்யைவேத்யர்த:" என்று ஸ்ரீ ரங்க ராமாநுஜ ஸ்வாமி பொரு ளுரைத்தார். இங்கே, 'யவன், எது' முதலியவற்றால் அந்த ச்ருதியும் ஸூசித மாகிறது. 'யவனவன்' என்று முதல் பாசுரத்தில், 'அவன் யார்?' என்று திரும்பவும் திரும்பவும் கேட்டதற்கு, இப்பாசுரம் மேற்கண்ட ச்ருதியின் முறையில், 'நாம் முதலிய ஸர்வமும் அவரே' என்று பதில் அளிப்பதுபோலும் இருக்கிறது. 'இவையு மவையு முவையும்' என்னும் 9-ம் திருவாய்மொழிப் பாசுரமும் இப்பாசுரத்தின் பொருள்களை விளக்குகிறது. 'தஜ்ஜலாந்' என்கிற ஹேது பதத்தை அப்பாசுரம் விவரிக்கிறது.

ஐந்தாவது பாசுரம்

"அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே."

[திருவாய்மொழி 1—1—5]

மூன்றும் பாதத்தில் 'ஸர்வாதாரத்வம்' [எல்லாவற்றையும் உள்ளுயிராயிருந்து தாங்கி நியமித்து ரக்ஷணஞ் செய்யும் வஸ்து ப்ரஹ்மமே] என்பதை விளக்கும் வேதாந்த வாக்யங்களை விசாரித்துப் பொருள் நிர்ணயிக்கப்படுகிறது. இப்பாசுரத்தில் அந்த மூன்றும் பாதத்தின் அதிகரணங்களின் ஸாரங்களை ஸங்க்ரஹித்து ஸூசிக்கும் நைபுண்யம் வாசாமகோசரம். ப்ருதிவீ முதலிய ஸகல தத்வங்களுக்கும் அபிமாநி தேவதைகள் உண்டு. நம்முடைய கண் காது முதலிய இந்த்ரியங்களுக்கும் அபிமாநி தேவதைகள் இருக்கின்றன.

உலகத்தை லோக பாலர்களாகக் காத்துக்கொண்டும், வ்ருஷ்டி முதலியவற்ருல் போஷித்துக்கொண்டும், ப்ராணிகளால் பூஜிக்கப்பட்டு அவரவர்களுக்குக் கோரிய பலங்களைத் தரும் இந்த்ர வருண ஸூர்யாக்நி வாயு முதலிய பல தேவர்களும் உண்டு. இவர்கள் எல்லோரும் ப்ராணிகளை ரக்ஷிக்கும் வ்யா பாரங்களைச் செய்துவருபவர்கள். ஆனல் அவர்க ளெல்லாரும் பகவானுக்கு ஶரீரங்கள்போல நியாம்ய ரானவரே. அவர்களுக்கு இந்த ஶக்தியெல்லாம் உண்டா யிருப்பதற்குப் பகவானே மூலம். இந்தப் பாதம் ப்ரஹ்மம். 'மேல் லோகம் கீழ் லோகங்களுக் கெல்லாம் தாங்கும் ஆதாரமாக உளது' என்று கூறும் ஸூத்ரத்தோடு தொடங்குகிறது. அடுத்த பூம வித்யாதிகரணத் திலும், எல்லாவற்றுக்கும் பூமாவான ப்ரஹ்மம் ஆதார மென்றும், பூமாவுக்குப் பூமாவே ஆதார மென்றுங் காட்டப்பட்டது. அடுத்த அம்பராந்தத்ருத்யதி கரணத்தில், அவ்யாக்ருதாகாஶம் முதலிய யாவும், ஸூர்ய சந்த்ரர்கள் நக்ஷத்ரங்கள் முதலியவைகளும், அக்ஷர ப்ரஹ்மத்தின் ஆளுகையிலும் தாங்குதலிலும் நிற்கின்றன என்று விளக்கப்பட்டது. அடுத்த ஈக்ஷதி கர்மாதிகரணத்தில், 'சதுர்முகன் முதலிய ஸகல ஜீவர்களுக்கும் மேற்பட்ட பரமபுருஷனைத் தீர்க்கமான த்ரிமாத்ர ஓங்காரத்தால் த்யாநித்து ஸாக்ஷாத் கரித்து, அவருடைய சுடர் விபூதிக்குச் சென்று அவரை ஸதா அநுபவிப்பர்' என்று கூறுவதால், ப்ரஹ்மதேவரும் அவரை நிரந்தரம் அநுஸந்தித்து அவரை யடைவதையும் கூறிற்று. அடுத்த தஹராதிகரணத்தில், 'ஹ்ருதயத்தி லுள்ள தஹராகாஶ மென்னும் ப்ரஹ்மத்தில் விச்வம் முழுவதும் பூத பவிஷ்யத் வர்த்த மாநங்களும் ஆதேயமாகத் தாங்கப்படுகின்றன' என்பது காட்டப்பட்டது. 'யதெஷ உஹிமெஸ்ஸ்ஸிஸ்ஷவஷெ:'—'உள்ளுள்ள பரமாத்மாவுக்கு உல கத்தை யெல்லாம் தாங்கும் மஹிமை ப்ரஸித்தம்' என்று கூறப்பட்டது.

'வாஸுதெவஸ்ய வீயெண விடீதாநி' என்றபடி இந்த மஹிமையை யுடைய ப்ரஹ்மம் வாஸுதேவனே. ஊர்த்வ லோகங்கள் பூமி முதலிய கீழ் லோகங்க ளெல்லாம் அவருக்குள் வஸிப்பதாக முதல் அதிகரணத்தில் கூறப் பட்டவரும், 'ஸஹஸ அ வஸ தஜெதி வெ ய தஃ' என்கிற வசநப்படி ப்ரஹ்ம வித்துக்களுக்கு ப்ரஸித்தனுன வாஸுதேவனே. அடுத்த ப்ரமிதாதிகரணத்தில், 'ஹ்ருதயத்தி லுள்ள ப்ரஹ்மம் பூத பவ்யங்களுக்கும் ஈஶாநன்; ஷயாஃவஸ்ஹீ: தவதி' என்கிற கடவல்லீ மந்த்ரப்படிக்கும், 'கூ நாக' என்ற அந்த அதி கரண ஸூத்ரப்படிக்கும் 'உலகத்தைத் தாங்கும் தேவர்களையெல்லாம் ஆண்டு செங்கோல் நடத்துபவர்' என்றும் கூறப்பட்டது. அடுத்த தேவதாதிகரணத்தில், 'மநுஷ்யர்களுக்கு மேற்பட்டவரும், மநுஷ்யர்களால் தங்களுக்கு இறைவ ரென்று பூஜிக்கப்படுபவருமான தேவர்களும் தங்களுக்கு இறைவனுன பர மாத்மாவை உபாஸித்துப் பூர்ணராய்த் தங்கள் குறைக ளெல்லாம் நீங்கி மோக்ஷப் பேறு பெறுகிருர்கள்' என்று காட்டப்பட்டது. தேவர்களும் அநித்ய ரென்றும், வேதங்களில் கூறப்படும் இந்த்ராதி தேவ வாசக ஶப்தங் கள் மாறிமாறி வரும் இந்த்ராதி வ்யக்திகளின் ஆக்ருதி மாத்ரத்தைச் சொல்லி அவர்களின் ப்ரவாஹமான ஜாதியைக் குறிக்கிற தென்றும், ப்ரளயத்தில்

தேவர்களும் பரமாத்மாவுக்குள் லய மடைந்துவிடுகிறார்க ளென்றும் காட்டப் பட்டது. அடுத்த மத்வதிகரணத்தில் 'வஸ்வாதித்யாதிகள் தங்களுக்குள் உள்ள பரமாத்மாவே தங்கள் ஶரீரியென்று உபாஸித்து, வேறு கல்பத்திலும் தங்கள் வஸ்வாதி பதத்தைப் பெற்றுப் பிறகு மோக்ஷ மடைகிறார்கள்' என்று கூறப் பட்டது. முமுக்ஷுக்களான தேவர்களும் ஒரு காம விசேஷத்தை அநுபவித் துப் பிறகு விளம்பிதமாய் முக்த ராகிறார்க ளென்று காட்டுவதால், காமநாபேத மூலமான அதிகாரி பேதங்களும் காட்டப்பட்டன. கடைசி அதிகரணத்தில், 'நாம் நினைவற்றுத் தூங்குகையிலும், நமக்குத் தெரியாமல் பரவஶமாய்த் தேஹத் தை விட்டு உத்க்ராந்தி யடைந்து லோகாந்தரங்களுக்கு ஸஞ்சரிப்பிக்கப்படுகை யிலும், நமக்குள்ளே யுள்ள அந்தர்யாமியான பரமாத்மா நம்மையும் நம் ஸூக்ஷ்ம ஶரீரங்களையும் தாங்கிக்கொண்டு நம் தேஹாதிகளின் வ்யாபாரங்களை நடத்துகிறார்' என்றும் காட்டப்பட்டது.

கீதையில், 'யொ யொ யாம் யாம் தநும் ஹக்த:' முதலிய ச்லோகங்களில் 'யவனவன்' 'எந்த எந்த' 'அவ்வவனுக்கு' (தஸ்ய தஸ்ய)' என்றும் 'அந்த நியம விதிப்படி பணிந்து, அந்தந்தக் காமங்களால் இழுக்கப்பட்ட மனதை யுடைய வராய்' (காமைஸ்தைஸ்தை:) என்று இதே விஷயத்தை வீப்ஸையால் (இரு தரம் படிப்பதால்) விளக்கிய முறையை நெஞ்சிற் கொண்டு இங்கே ஆழ்வார் 'அவரவர் தமதம தறிவறி வகைவகை அவரவ ரிறையவர்,' 'அவரவர் விதிவழி' என்று பாடுகிறார். இப்பாசுரத்தில் இக்கீதா வசநங்களைத் திருவாறுயிரம் முதலிய வ்யாக்யாநங்கள் உதாஹரித்தன. 'காமைஸ்தைஸ்தை: ஹ்ருதஜ்ஞாநா:' என்பதற்கு 'அறிவறி வகைவகை' என்பது தமிழ். 'காம' மென்பதும் ஆத்மாவின் தர்மபூத ஜ்ஞாநத்தின் வ்ருத்தி விசேஷமே யென்னும் ஸித்தாந் தத்தை 'அறிவறி' என்றதால் ஸூசிக்கிறார். அவர்கள் பணியும் தேவர்கள் ப்ரஹ்மத்திற்கு உடலே (தநுவே) என்றும், அத்தேவர்களை உபாஸித்தாலும் உண் மையில் இவர்கள் அறியாவிடினும் உடலின் உயிரான பரமனையே உபாஸித்த தாக ஆவதால், அவர்களுக்கு முள்ளேயுள்ள உயிரான ப்ரஹ்மம் கோரிய பலன்களைத் தானே யளிக்கிறது. அவரவர்களுடைய தேவதா ச்ரத்தையைக் குறையும்படி செய்கிற தில்லை; அவர்களுடைய அந்த ச்ரத்தையையும் தான் அசலமாக இருக்கச் செய்கிறது. அவர்கள் கேவலம் உடலானபடியால் தங்கள் ஶக்தியால் மட்டும் பய னளிக்க ஸாமர்த்ய மற்றவராய்க் குறைந்தவரா யிருப்பினும், அவர்களைக் குறைவிலராகவும் பய னளிப்பவராகவும் ஜநங்கள் விச் வஸிக்கும்படி அவர்களுக்கும் இறைவனான ப்ரஹ்மம் தானே விரும்பியதைக் கொடுக்கிறது.

'அவரவ ரிறையவர்' என்பதால், அந்தந்த மநுஷ்யர்களுக்குமட்டும் இறையவரான பூஜ்யர் என்பதை ஸங்கோசப்படுத்திக் காட்டுகிறார். 'இறை யவர்' என்று மூன்றும் அடியின் முடிவில் இன்னாருக்கு இறையவன் என்று கூறாமல் பொதுவாகக் கூறியிருப்பதால், அஸங்கோச ந்யாயத்தால் 'ஸகலருக் கும் இறையவர்' என்பதை விளக்கும் அழகு ஶாஸ்த்ரஜ்ஞர்களுக்கு ரஸ மளிக்கும். பொதுவிலே, 'இறையவர்' என்கிறார். "அவர்களோடு அவர்கள்

ஆச்ரயிக்கும் தேவதைகளோடும் தம்மோடும் வாசியற எல்லோருக்கு மொக்ஷ இறைவ ராகையாலே 'பதிம் விச்வஸ்ய' என்கிறபடியே எல்லோருக்கு மொக்ஷ ஸ்வாமியானவர்" என்று இந்த ரஸத்தை ஈடு விளக்கிற்று.

நான்காம் அடியில் 'விதிவழி யடைய' என்பதனால், 'தேவாந் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி' என்று கீதையில் கூறியபடி, "அவர்கள் விதிப்படி என்னை யறிந்து நான் பலங் கொடுக்கவேண்டு மென்று உபாஸியா விடினும், என் ஶரீரமான அந்தத் தேவதைகளை உபாஸிக்கும் ஶாஸ்த்ர விதானப் படி உபாஸிப்பவர்களுக்கு ஶாஸ்த்ரம் விதித்த வழிப்படி யுள்ள பலத்தைக் கொடுத்து விடுகிறேன்" என்ற கீதா வசநங்களை ஸூசிக்கிறார். 'அடைய' என்பதற்கு 'தேவதோபாஸகர் ஶாஸ்த்ர விஹித வழியில் காங்க்ஷிதத்தை யடை யும்படி ஸர்வேச்வரனை இறையவர் அவர்களுக்குள் அந்தர்யாமியாய் அடைய வ்யாபித்து நிற்கிறார்' என்று தாத்பர்யங் கொள்ளும்படி 'பெறும்படி' என்றும், 'சூழ்ந்து வ்யாபித்து' என்றும் இரண்டு பொருள்கள். 'நின் றனரே' என்பதால், அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில், 'ப்ருதிவ்யாம் திஷ்டந்' 'அக்நௌ திஷ்டந்' என்று ஆதித்ய அக்நி வாயு முதலிய தேவதைகளின் உள்ளே நின்று நியமிப்பதாகப் பல்கால் படித்துள்ள 'திஷ்டந்' 'யமயதி' என்கிற ஶப்தங்களை ஸூசிக்கிறார். 'இறையவர்' என்று இங்கே விச்வ ரக்ஷணத்தைத் தேவர்கள் மூலமாயும் நேரிலும் வர்ணிக்கு மிடங்களில், 'நஹி பாலந ஸாமர்த்ய்ம்ருதே ஸர்வேச்வரம் ஹரிம்' என்கிற வசநத்தை நினைவூட்டி, ஸர்வேச்வரரான ஹரி யொருவர்தான் ஸ்வத: இறையவராய் ரக்ஷிக்க வல்லவ ரென்பதை விளக்கு கிறார். 'ஜ்யோதிராத்யதிஷ்டாநம் து ததாமநநாத்' என்கிற இரண்டாம் அத்யா யம் நான்காம் பாத ஸூத்ரப்படி, ஸூர்யாதி தேவதைகள் கண் முதலியவற் றில் அபிமானி தேவதைகளாயிருந்து உதவுவது பரமாத்ம ஸங்கல்பத்தால்தான் என்று அந்தர்யாமி ப்ராஹ்மணத்தை உதாஹரித்து விளக்கப்பட்டது. 'பீஷாஸ்மாத் வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய:', 'யதாதித்யகதம் தேஜ: ஜகத்பாஸயதேऽகிலம் । யச்சந்த்ரமஸி யச்சாக்நௌ தத்தேஜோ வித்தி மாமகம் ॥' முதலிய வசநங்களின் படிக்குத் தேவர்களின் ஶக்திக் கெல்லாம் ப்ராஹ்மமே மூல மென்பதை விளக்குகிறார். 'மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ' என்று பின்னால் பாடுவது இக்கருத்துக்களை நன்கு விளக்குகிறது.

[தொடரும்]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜென்ஸி நிபந்தனைகள்.

ஒரு தடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக்கொள்ளுபவர் களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜண்டுகள் காபி 1-க்கு 4 அணா வீதம் டிபாஸிட் கட்டவேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீ ஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

மோக்ஷவிசார விமர்சநம்

[ஸ்ரீ. உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத கலாசாலை, திருவையாறு]

ஸ்ரீ. உ. வே. மஹாவித்வான் காளி ரங்காசார்ய ஸ்வாமி, 'மோக்ஷ விசாரம்' என்னும் க்ரந்த மொன்றெழுதி, விஶிஷ்டாத்வைதிகள் இசைந்த மோக்ஷ ஸ்வரூபத்தை ஸ்திரீகரணம் செய்வதற்காகச் சில பூர்வபக்ஷங்களை வெளியிட்டு, வித்வான்கள் யுக்தி பூர்வகமாக அவற்றிற்கு ஸமாதாநம் சொல்ல வேண்டு மென்று கேட்டிருப்பதாகச் சென்ற ஆவணி மாஸத்து ஸஞ்சிகையில் ஸம்பாதகரின் குறிப்பில் காணப்படுகிறது. குறிப்பில் காணும் அவ்வாக்ஷேபங்களையும், அவற்றிற்கு நம் ஸித்தாந்த க்ரந்தங்களி லுள்ள ஸமாதாநங்களையும், ஸங்க்ரஹமாக விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறேன்.

(1) அப்ராக்ருதமான ஸ்ரீ வைகுண்டத்தில் நிரதிஶயாநந்தாநுபவ கைங்கர்ய மென்பது மோக்ஷமாகில் 'நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி' 'நாநாயண ஸாயுஜ்யமவாப்நோதி' இத்யாதி ச்ருதி ஸ்வாரஸ்யத்திற்கு அது ஒத்துவரவில்லையே யென்பது முதல் ஆக்ஷேபம். இதற்கு ஶாரீரகத்திலேயே ஜகத் வ்யாபார வர்ஜாதிகரணத்திலே ஸ்பஷ்டமான ஸமாதாநம் உள்ளது. பரம ஸாம்ய மென்பது, ப்ரஹ்மாநுபவ மாகிற போக மாத்ரத்திலே ஏற்படும் ஸாம்யமே. ஜகத் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரத்தில் ஈச்வரனோடு முக்தனுக்கு ஸாம்ய மில்லை. ஸாமாந்ய விஶேஷ ந்யாயத்தாலே, பரம ஸாம்ய ச்ருதியானது ஸாமாந்ய ரூபையாகையால், போக ஸாம்யத்தைச் சொல்லும் விசேஷ ச்ருதியில் பர்யவஸாநம் பெறுகிறது. 'ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதேதி' என்பது விஶேஷ ச்ருதி. க்ஷீரத்தோடு சேர்த்து அந்நத்தைப் புஜிப்பதுபோல், முக்தனானவன் ப்ரஹ்மத்துடன் கல்யாணகுணங்களை யெல்லாம் அநுபவிக்கிறானென்பது இதன் கருத்து. அத்வைதிகளும் இவ்வதிகரணத்தில் இவ்வாறே நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.

"போகமாத்ரமேவைஷாமநாதிஸித்தேநேஶ்வரேண ஸமாநமிதி ஶ்ரூயதே"

என்பதாக இங்கு ஸ்ரீ ஶங்கர பாஷ்யம். ஆகவே நிரதிஶயாநந்தாநுபவமே பரம ஸாம்ய ச்ருதிஸித்த மென்று தெளிவாகிறது.

ஸாயுஜ்ய ச்ருதி ஸ்வாரஸ்யமும் ப்ரஹ்மாநுபவமே மோக்ஷம் என்கிற தர்ஶநத்திற்கே யுள்ளது. ஒரு போக்யத்திலே இருவரும் போக்தாக்களாய் அந்வயம் பெறுகையாலே முக்தருக்கு ப்ரஹ்ம ஸாயுஜ்ய மென்கிறது.

"ஸாயுஜ்யம் ஸலோகதாம் ஜயதி உக்தாதிதேவதாஸாயுஜ்யம்"

என்பதாக இவ்வதிகரணத்திலே அத்வைத பாஷ்யம். ஸாயுஜ்யம் சொல்லுகையால் பேதம் ஸித்திக்கிறதென்று இங்கு அத்வைத பாஷ்யகாரர் ஸ்தாபநம் செய்

கிறார். ஸாயுஜ்யம் என்பதற்கு ஸமாந தேஹம் பெறுகை என்று இங்கு ஆநந்த கிரி விவரணம். இவர் ஸ்ரீ ஶங்கரருடைய ஸாக்ஷாத் சிஷ்யர். 'ஸாஸா- வணா ஸயுஜா ஸவாயா' என்கிற முண்டகோபநிஷத்தில் 'ஸயுஜள ஸஹைவஸவஜாயநௌ' என்று ஸ்ரீ ஶங்கர பாஷ்யம். கூடவே ஸர்வ காலமும் சேர்ந்திருக்கை ஸாயுஜ்ய மென்று பேதம் ஸ்பஷ்டம். நியந்த்ரு நியாம்ய பாவத்தினுலே ஸாஹித்யம் பெறுகை ஸாயுஜ்யம் என்பதாக, குஹாதிகரணத்தில் அத்வைத வ்யாக்யாநங்கள் காண்கின்றன. போக்ய ஸாம்யம் அல்லது குண ஸாம்யம் ஸாயுஜ்ய மெனப்படும் என்பது விசிஷ்டாத்வைத தர்சநம். ஸாயுஜ்யம் என்பது ஸ்வரூபத்தில் ஐக்யமன்று என்பது அத்வைதிகளும் இசைந்த விஷயம் என்பதற்காக அவர்கள் பாஷ்யத்தையும் அதன் விவரணங்களையும் குறிப்பிட்டுள் ளேன். மேலும் 'ஏதாஸாமேவ தேவதாநாம் ஸாயுஜ்யம்...ஶ்நோதி' என்பதாக அக்நி வருணுதிகளான பல தேவதைகளோடு ஒருவனுக்கு ஸாயுஜ் யம் சொல்லுகிறது ச்ருதி. ஒரு வ்யக்தி பலரோடு ஏககாலத்தில் ஐக்யம் பெற முடியுமோ? க்ரமேண ஐக்யம் பெறுவதாகில் அக்நியோடு ஐக்யம் பெற்றவன் வருணனோடு பிறகு ஐக்யம் பெற்றுவிட்டபடியால் அக்நி தேவதையே யில்லை என்றாகிவிடும். இவ்வாறாக வருண ஸாயுஜ்யம்போய் மற்றொரு ஸாயுஜ்யம் பெறுகையில் வருணன் எனும் தேவதையே போய்விடவேணும். ஆகவே ஸாயுஜ்யமானது ஐக்ய மன்று. விஶிஷ்டாத்வைதிகள் இசைந்த நாராயண ஸாயுஜ்யமே உதாஹ்ருத ச்ருதியினுல் ஸ்வரஸமாக ஸித்திக்கின்றது.

(2.) அப்ராக்ருதமான தேஶ விஶேஷத்தில் விக்ரஹ விஶிஷ்டமான ப்ரஹ்மத்தின் பரிபூர்ணநுபவமே மோக்ஷம் என்று உபநிஷத் வாக்யங்களிலிருந்து ஸ்பஷ்டமாகவில்லை யென்பதாகத் தாநாதிகாரி ஸ்வாமியின் இரண்டாவது பூர் பக்ஷம். ஸித்தாந்தத்திற்கு மூலங்களான ச்ருதிகள் பல உண்டு. அவற்றில் சில வற்றை உதாஹரிக்கிறேன்.

'வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்'

'க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே'

'தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய:'

'ஸோऽத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம்'

இத்யாதி ச்ருதிகளில் ப்ரக்ருதி மண்டலாதீதமான தேஶ விஶேஷத்திலே ஆதித்ய வர்ண விக்ரஹ விஶிஷ்ட பகவத் ப்ராப்தியானது ஸ்பஷ்ட மாகிறது. அந்த ப்ராப்தியாவது பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமே யென்பது

'ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதேதி'

என்று முன் உதாஹ்ருதையான தைத்திரீய ச்ருதியினுல் தெளிவாகிறது. அபே க்ஷித போக்யங்களை முக்தன் பரமபதத்தில் அநுபவிக்கிறு னென்று இந்த ச்ருதி சொல்லுகிறது. 'தம் பஞ்சஶதாநி அப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி' என்று தொடங்கி, 'ஶதம் மாலாஹஸ்தா: ஶதமாஞ்ஜநஹஸ்தா:' என்று ப்ரக்ருதி மண்ட லாதிக்ரமம் மற்றொரு ச்ருதியிலு முள்ளது. 'ஸோऽஶ்நுதே' என்ற ச்ருதி யானது மோக்ஷ ஸ்வரூப விவரணம் செய்கிறது. 'ப்ரஹ்மவிதாப்நோதி பரம்' என்று நான்கு அர்த்தங்கள் ப்ராஹ்மணத்தினுலே ப்ரதிஜ்ஞாதங்கள். ப்ரஹ்மம்

வேதநம், ப்ராப்தி, ப்ராப்யம் என்பவையே அவை. முறையே அந்நான்கையும் விவரணம் செய்கிறது அந்த ச்ருதியே. அதில் ப்ராப்தியை விவரணம் செய்கிற இடம். 'பரமே வ்யோமந் ஸோऽஶ்நுதே' என்பது. எதை அநுபவிக்கிருனென்ருல்—'ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா' என்று அநுபாவ்ய மின்னதென்று மேலே விவரணம் செய்தது. 'வித்வாந் நாமரூபாத்விமுக்த: பராத்பரம் புருஷமுபைதி திவ்யம்' இத்யாதிகள் ஸ்பஷ்டார்த்தங்களானவை. பரம ஸாம்யம் என்பதும் ஸாயுஜ்யம் என்பதும் பரப்ரஹ்மாநுபவத்தைப்பற்றியதென்பது முதல் ஆக்ஷேபத்தின் ஸமாதாநத்திலே தெளிவானது.

(3) இனி மூன்ரும் ஆக்ஷேபம். அதாவது:—அபஹதபாப்மத்வாதி குணஷ்டக விஶிஷ்ட ஆத்ம ஸ்வரூபம்தான் த்யேயமே யொழிய பகவத் கைங்கர்ய விஶிஷ்டம் த்யேய மன்று; ஆகவே: தத்க்ரது ந்யாய விரோதம் வருகிறது என்று. தத்க்ரது ந்யாயத்தின் நோக்க மிதுவன்று. த்யேயமான ஆகார மெல்லாம் ப்ராப்தி தசையிலும் அநுபாவ்யமேயாகு மென்கிற அயோக வ்யவச்சேதமே அதன் க்ருத்யம். மற்றது அநுபாவ்ய மன்று என்கிற அந்ய யோக வ்யவச்சேதத்தில் அதற்கு நோக்கில்லை. தஹர வித்யையில் அபஹத பாப்மத்வம் முதலிய எட்டு குணங்களே உபாஸ்ய மாகின்றன. அவற்றைத் தவிர்த்து மற்ற குணங்களும் ப்ராப்தி தசையில் அநுபாவ்யங்களே. இது அத்வைதிகள் உட்பட இசைந்த விஷயம். ஸர்வ காமங்களையும் ப்ராப்தி தசையில் அநுபவிக்கிருன் என்பதான 'ஸோऽஶ்நுதே' என்கிற ச்ருதியினுலேயே இந்த ந்யாயத்தின் நோக்கம் தெளிவாகிறது. ஸர்வ காமங்களும் த்யேயங்க ளன்றே. ஸர்வ குண விஷயகமான த்யாநமானது அப்ரஸித்தமும் அஶக்யமு மன்ருே? குணேபஸம்ஹார பாதத்தில் ப்ரதிநியதங்களான குணங்களே அந்தந்த வித்யையில் த்யேயங்க ளென்று ஸ்தாபிதம். ப்ராப்தி தசையிலோ 'ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந்' என்று எல்லாக் குணங்களும் அநுபாவ்ய மாகின்றன. ஆகவே த்யேயாகாரத்திற்கு மேலும் ப்ராப்யமாகலாம். குணஷ்டக விஶிஷ்டாத்ம ஸ்வரூபம் த்யேயமாளுலும் பகவத் கைங்கர்யாதிகள் ப்ராப்யங்களாகத் தட்டில்லையே.

(4) 'ஸ்ரீவைகுண்டத்தை மோக்ஷ ஸ்தாநமாகக் கொண்டால் நித்ய ஸூரிகளான கருடன் ஜய விஜயாதிகளுக்குப் புராணதிகளில் ஶாபமும் அதன் விமோசநமும் சொல்லியது ஸங்கதமாகமாட்டாது. ஸ்ரீக்ருஷ்ணன் வைதிக புத்ரர்களை ஸ்ரீவைகுண்டத்திலிருந்து அழைத்துவந்ததாக ஸ்ரீபாகவதாதிகள் சொல்லியது பொருந்தாது' என்பதாக நான்காவது பூர்வபக்ஷம். மத த்ரயத்திலும் இவ்வாக்ஷேபம் செய்யலாம். அர்ச்சிராதி கதியினுல் வைகுண்டத்தை அடையவேண்டு மென்பதையும் புநராவ்ருத்தி இல்லை யென்பதையும் அத்வைதிகளும் இசைகிருர்கள். ஸ்ரீ ஶங்கராசார்யர் தமது தாயார் முக்தி பெறும் காலத்தில், அவளுக்கு நிர்க்குண ப்ரஹ்மத்தை உபதேசம் செய்தாராம். அதைத் தாயார் மறுத்து ஸகுண ப்ரஹ்மத்தையே விரும்பினுளாம். பிறகு பரமசிவனை த்யாநம் செய்தாராம் ஸ்ரீ ஶங்கரர். சூல பிநாகபாணிகளான சிவ தூதர்களைக் கண்டு அஞ்சி ஶிவலோகம் தமக்கு வேண்டா மென்று அதையும் தாயார் மறுத்து

விடவே, பிறகு ஸ்ரீ வைகுண்ட நாதனை ஆசார்யன் ப்ரார்த்திக்க, விஷ்ணு தூதர்கள் வந்து அர்ச்சிராதி மார்க்கத்தாலே தாயாரை ஸ்ரீ வைகுண்டத்தை அடைவித்தார்களாம். ஸ்ரீ ஶங்கர திக்விஜயத்தில் 14-வது ஸர்க்கத்தில் இதைக் காணலாம். ஸ்ரீ வித்யாரண்யர் இயற்றியது இந்த க்ரந்தம். அர்ச்சிராதி கதியன்றியே ஸநகாதிகள் செல்வதும் திரும்புவதும் எப்படி? இதற்குள்ள ஸமாதாநத்தை அவர்கள் சொல்லும் கணக்கிலே விஶிஷ்டாத்வைதிகளும் சொல்லலாமன்றோ? அது என்னவென்றால்:—இது ஸாக்ஷாந் மோக்ஷமன்று. 'ஸுவர்க்கம் விந்தி ஸுக்ஷேமம் விந்தி, ஸ்வதந்த்ரம் விந்தி' என்றும், 'ஶுணத்ரயவிவர்ஜிதம்' என்றும் சொல்லும் அப்ராக்ருத ஸ்தாநமே நம் தர்ஶநத்திலே ஸாக்ஷாந் மோக்ஷமென்கிறது. ப்ரக்ருதி மண்டலத்திற் குள்ளேயும் விஷ்ணு லோகமென்றும் ஸ்ரீ வைகுண்டமென்றும் ஸாந்தாநிக லோகமென்றும் பகவல்லோகங்கள் உண்டு. 'லோகாந் ஸாந்தாநிகாந் நாம யாஸ்யந்தீமே ஜநாஸ்ததா:' என்றும், 'ஸவைஷ்ணவம் ப்ரவிஶத்வை ப்ரஹ்மலோகாதநந்தரம்' என்றும் உத்தர ஸ்ரீராமாயணத்தின் அவஸாநத்தில் காண்க. ஸ்ரீ பாவதத்திலும் எட்டாவது ஸ்கந்தத்தில்

> 'வைகுண்ட: கல்பிதோ யேந லோகோ லோகநமஸ்க்ருத: ।
> ரமயா ப்ரார்த்யமாநேந தேவ்யா தத்ப்ரியகாம்யயா ॥'

என்று சொல்லியிருப்பதைம் அநுஸந்திக்கவும். த்வீபங்கள்தோறும் பகவந் மூர்த்திகளும் திவ்யலோகங்களும் அவ்வவத்வீபவாஸிகளால் ஆராதிக்கப் பெற்று வருவதாக ஸ்ரீபாகவதம் சொல்லுகிறது. கார்யாதிகரண ச்ருதப்ரகாஶிகையில் அப்ராக்ருத லோகமே அர்ச்சிராதி ப்ராப்யமென்றும், அது புநராவ்ருத்தியில்லாததென்றும் ஸ்தாபநம் செய்திருப்பதையும் காண்க. இது விஷயமான சர்ச்சை யொன்று பத்ராதிப ஸ்வாமியால் உத்தாபநம் செய்யப்பட்டு, அதற்கு ஸமாதாநமும் வ்யய வர்ஷத்து ந்ருஸிம்ஹ ப்ரியையில் ப்ரசுரமாகியிருக்கிறது. ஆகவே இது விஷயத்தில் அதிக விஸ்தாரம் மறுபடி அபேக்ஷிதமில்லை.

(5) இனி ஐந்தாவது ஆக்ஷேபம், பகவதைக்யமே மோக்ஷமென்று ஆழ்வார்களின் திருவுள்ளமென்று ஏற்படுகிறதாம்.

> "நேசஞ்செய் துன்னோடென் னையுயிர் வேறின்றி யொன்றாகவே
> கூசஞ்செய் யாதுகொண்டாய்...."

என்று ஆழ்வார் அருளியது இதற்கு ப்ரமாணமாம். இது கடைசி ஆக்ஷேபம். ஆழ்வார் ஸ்ரீஸூக்தியே நமது தர்சநத்திற்கு ஆதாரம்.

> "சன்மசன் மாந்தரங் காத்தடி யார்களைக் கொண்டுபோய்த்
> தன்மை பெறுத்தித்தன் தாளிணைக் கீழ்க்கொள்ளு மப்பனை"

என்றும், 'காயம்கழித்தவன் தாளிணைக்கீழ்ப் புகுங் காதலன்' என்றும், 'பெற்றினிப் போக்குவனோ வுன்னையென் தனிப்பே ருயிரை' என்றும், இவ்வாறாகப் பகவதநுபவ பரீவாஹமான கைங்கர்யமே மோக்ஷத்தில் என்பது பற்பல ஆழ்வார் திவ்யஸூக்திகளிலே தெளிவானது. விஜ்ஞாநமயனுக்கு ஆத்மாவும் ஆநந்தமயனுக்கு ஆத்மாவும் ஒன்று என்பதாக தைத்திரீய ச்ருதி. ஆகவே

ஜீவாத்மாவுக்கு உயிரும் பரமாத்மாவுக்கு உயிரும் பரமாத்மாவே யாகையால், 'உயிர் வேறின்றி யொன்ருகவே' என்பது ஜீவ பரமாத்ம ஸ்வரூப பேதத்திற்கு மிகவும் பொருத்தமானதே.

இவ்வாறு, ஐந்து ஆக்ஷேபங்களுக்கும் ஸமாதாந முண்டாகையால், விஶிஷ்டாத்வைத தர்ஶநமானது 'ஸவிஶேஷ: ஸஶரீரம் ஶரீரம் ந:' என்றும், 'ஸவிஶேஷ விஷயம் ஸஶரீர ஜீவம்' என்றும் ஆசார்யர்களால் கொண்டாடப்பெற்றிருப்பது சிலா லிபியாய் ப்ரதிஷ்டித மாகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மதுராலாபம்

[கல்யாணபுரம் ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர் M. A., வித்வான் L.T., திருவையாறு]

'ஹரே முகுந்தம் வியாஹராமி' என்ருர் குலசேகரன். வேலைக்கு விடுமுறையும் மனத்திலே ஆர்வமும் கூடிய காலமா யிருந்தது. திருவையாறு கும்பகோணம் பெருவழியில் ஸ்வாமி மலையில் இறங்கி வயற்புறமாய் நடந்து சென்றேன். காடுமுரடான வழி. உயர்ந்த திடல்கள். குறுகிய வரப்புகள். வறண்ட சிறு வாய்க்கால்கள். இனிய தென்னந்தோப்புகள். இவற்றின் வழியாக வடக்கே நடந்தேன். இறுதியில் திரு ஆதனூர் வந்தடைந்தேன். சித்திரை மாதம் சுக்ல பக்ஷ தசமி நன்னுள். குளத்தின் சிற்றலைகள் வெள்ளி ரேகைகள் வாய்க்கப்பெற்று வீசும் மெல்லிய தென்றலில் அசைந்தன. குளக்கரையில் ப்ரம்ஹாண்டமான ஒரு வட வ்ருக்ஷம் 'சோ' என்று சப்தித்துக் கொண்டு அசைந்தாடிய கிளைகளுடன் விளங்கியது. வேலிக் கரைகளிலிருந்து இனிய ஜாதி மலர்களின் நறுமணம் உட்சென்றது. செறிந்து இருண்டு புதராகப் படர்ந்திருந்த ஏதோ கொடியின் பெரிய மலர்கள் குவிந்தும் குவியாமலும் இருந்துகொண்டு, ஸதாசார்யனை அடைந்து ஜ்ஞாநாநுஷ்டாநங்கள் முற்றப் பெருத சிஷ்யனுடைய நிலையை உணர்த்தின. கீழ்வானம் நீலமாக, நிஷ்களங்கமாக, ஒரு மெல்லிய நீல விரிப்புப்போல் விளங்கியது. பிற்பகலில் உதித்தெழுந்த மதிப் பிறை பால்வண்ணங் கொண்ட தேங்காய்ப் பிளவுபோலத் தன் மெல்லிய பூங்கதிர்களை நிலவுலகின்மேல் சொரிந்துகொண்டிருந்தது. குளத்தையும் ஜலத்தையும் காலத்தின் உத்ஸாஹ குணத்தையுங் கண்ட என் உறுப்புகள் ஸந்த்யாவந்தந மென்ற செயலில் விரைந்தன. சற்று அப்பால் 'ப்ரபோ! ரங்கபதே!' என்ற த்வநி கேட்டது. என் உள்ளம் பூரிப்படைந்தது. ஆஜாநுபாஹுவாய், த்வாதச ஊர்த்வபுண்ட்ர மண்டிதரான ஓர் வயோதிகப் பெரியவர் ஆசமநம் செய்து கரையேறக் கண்டேன். விரைவில் வந்தநத்தை முடித்துக்கொண்டு அப்பெரியவரைத் தண்டனிட்டு எழுந்தேன்.

'வத்ஸா! உனக்கு என்ன வேண்டும்?' என்ருர்.

'ஸ்வாமி! தேவரீர் ஸர்வேச்வரனை வழிபடும்பொழுது அடியேனும் கூட வரவேண்டும். இதே' என்றேன்.

நிறைந்த சந்திரன்போன்ற அவர் திருமுகத்தில் மந்த ஸ்மிதம் உலவியது. நிலவின் வெள்ளிய கிரணங்கள் அவரது கம்பீரமான ஆக்ருதியில் எங்கும் துழாவி, இயற்கையில் வெளுத்த அவர் வடிவத்தைப் பன்மடங்கு பால் வெளுப்பாக ஆக்கியது. க்ஷீர ஸாகரத்திலிருந்து அப்பொழுதுதான் உதித்தெழுந்த நித்யஸூரிபோல் அவர் தோன்றினார். பால்வண்ணமாகிற பரபாகத்தில் திருமேனியின் செம்மையினால் உண்டாய ரோஜா நிறமான சில படலங்கள், கன்னங்களிலும் நெற்றி ஓரங்களிலும் புஜம் கை இவற்றின் உட்புறங்களிலும் வக்ஷஸ்ஸின் ஆரம்ப பாகங்களிலும் காணப்பட்டன. சேதநனது தவப் பயனால் பூமியில் அவதரித்து நின்றயாரோ ஒரு நித்யஸூரி போலத் தோன்றினார். ஓர் பரந்த கற்குறட்டின்மேல் தாமும் உட்கார்ந்து என்னையும் உட்காரச் சொன்னார்.

'வத்ஸா! எம்பெருமானை வழிபட உனக்கு அவ்வளவு துணிச்சல் உண்டாயது எங்ஙனம்? அதற்கு வேண்டிய உயர்ந்த நிலை.......' என்று அவர் சொல்லுமுன் நான் கைகுவித்துச் சொன்னேன்.

'ஸ்வாமி! பாதகி வர்க்கத்தில் முற்பட்டவன் நான் என்பதை அறிவேன். ஆயினும் கலியுகம்; ஸர்வேச்வரன் அர்ச்சாரூபி; கோவில்களோ யாரும் சென்று சேரத்தக்கவை. ஆசார அநுஷ்டாநங்களுக்கு அடிப்படையான அந்தக்கரண வஸ்து கண்ணுக்குப் புலப்படுவதல்ல. ஆகையால் ஸாது அஸாது என்று பகுத்தறிவது கடினம். எனவே என்னையை பாபியரும் தேவரீர் போன்ற திவ்ய ஸூரிகளும் ஒன்றுபட்டு நிற்கும் இடம் ஸர்வேச்வரனது திவ்யாலயமே. எத்தகைய கொடிய பாபிகளிடமும் பரவிக் காக்கும் அவனது தயையைத் தஞ்சமாகக் கொண்டுதான் இங்கு வரத் துணிந்தேன்.

ஸ்வாமி மேலும் புன்னகை பூண்டார். சிதறிய அசோக மலர்களின் இதழ்களைக் கொண்ட பனிவரைத் தடத்தில் நிலவு பரவியதுபோல் அவருடைய அழகிய வதனத்தில் அச்சிரிப்பு விளங்கியது. 'வத்ஸா! நான் சொன்ன சொற்களில் குற்றம் கொள்ளாதே. வேடிக்கையாகக் கேட்டேன். ஸர்வேச்வரனிடம் இந்த தயையைத்தான் பாபிகளாகிய நாம் தஞ்சமாகக் கொள்ள வேண்டும். அவனுடைய இனிய கருணையை யார் அறிய முடியும்? நமக்காகப் படாதன பட்டு இந்த நாற்ற மண்ணினை நாடிவந்த அந்த நாராயணனைத் தயையயின் வடிவமாகவேதான் கொள்ளவேண்டும். இவனை எத்தைக் கொண்டு மயக்கலாம்? '𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨 𑌤𑌪𑍋 𑌨𑍇𑌜𑍍𑌯𑌾 𑌨 𑌶𑍌𑌚𑌂 𑌨 𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌿 𑌵𑍈' என்று ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான் திருவாய்மலர்ந்தபடி '𑌪𑍍𑌰𑍀𑌯𑌤𑍇𑌽𑌮𑌲𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌹𑌰𑌿𑌰𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌡𑌮𑍍𑌬𑌨𑌮𑍍' அல்லவா? குழந்தாய்! சற்று ஸாவதாநமாய்க் கேள்' என்றார்.

அவர் குரலில் அன்பு ததும்பித்து. நான் அவரிடம் நெருங்கி உட்கார்ந்தேன். மரங்களின் இலைகளில் மந்தமாருதம் சலசல வென்ற ஓசையை உண்டுபண்ணியது. வாய்க்கால் கரைகளில் வெடித்த 'தாழை மலர்களின்

புதுமணத்தை அள்ளி வீசியது. நான் கவளித்தேன். திசைகளும், ஆகாய மும், குளமும் எல்லாம் மறைந்தன. பெரியவரின் ஊர்த்வபுண்ட்ரமும் சுடர் விட்டு ஒளிரும் விசாலமான முகமும் கருணை ததும்பும் கண்களும் என் அந்தராத்மாவை நல்ல கவனத்தில் நிறுத்தின. தாயின் தாலாட்டுப்போல் இருந்தது அவருடைய குரல்.

“பல நூறு வர்ஷங்களுக்குமுன் ஒரு கொடிய பஞ்சம் இந்த நாட்டில் தோன்றியது. ‘பசி! பசி!’ என்று ஓலமிட்டவர் பலர். மக்களைக் கொண்டு வெளி யேறி, ஏதும் ஆறுதல் பெறுமல் வழியிலும் குளக் கரைகளிலும் புதர்களிலும் மடிந்தவர் பலர். பசியின் கொடுமையினுல் எழுந்த பாவச் செயல்கள் பல பல. பச்சைப் பசுங் குழந்தைகளைத் திருகிக் கொல்பவரும், மரிக்கும் மக்களின் வேதனை காண இயலாமையால் முன்னமேயே தீர்த்து முடிப்பாரும், கை கால் களைக் கடித்துத் தின்பாரும் இப்படி மனித உலகமானது நரக உலகமாக மாறிற்று. இந்த கோரமான காட்சியை வர்ணித்துப் பயனென்ன? ‘ஈ௩ஃ௺ கடைஃ வணை௱வாவெஃ உலெஹவ ஸுஉஸு௲தெ’ என்கிற முறையில் தாம் செய்த பாபத்தின் கொடிய பயனை நுகர ஆரம்பிக்கும் பொழுதே தயாபர ஞன ஸர்வேச்வரனது உள்ளம் உருகிற்று. இந்த ஸமயம் ஒரு மஹான் இந்த ஆலயத்தின் உள்நுழைந்து இங்கே நின்ற திருக்கோலமாக இருந்த எம்பெரு மானைப் பாடி வாழ்த்திப் பதறிப் பசிப் பிணியினுல் வாடும் மக்களின் கோர மான நிலைமையை வர்ணித்து அழுது நிற்க, எம்பெருமான் இரக்கங் கொண் டான். தன் அர்ச்சாஸமாதியைக் கடந்து ஒரு தனிகஞன மிராசுதாரின் கோலங் கொண்டு மூன்று நாட்கள் பக்வாந்நமான இனிய சோறும், பிறகு ஒரு பக்ஷம் பொன்போன்ற நெல் தாந்யத்தையும் அளந்தளந்து மக்களுக்கு வர்ஷித்தான். கடல் பொங்கி வருவதுபோல் பசித்த மக்கள் இரைந்து விரைந்து வந்தனர். வாரிவாரித் தின்றனர். பசிப்பிணி தீர்ந்தனர். வாய்க்கால்கள் பெருகின. குளங்கள் நிறைந்தன. வயல்கள் செழித்தன. நாடு செழித்தது. ஸர்வேச்வரன் இவ்வர்ச்சா வடிவில் இத்தகைய எல்லையற்ற இரக்கம் காட்டித் தன்னை மதி யாத மக்களையும் பரிபாலித்தருளுகிருன். தன் நீலமா மேனியில் வியர்வைத் துளிகள் நக்ஷத்ர சகலங்கள்போல் மின்ன, தாமோதரன் கையிலே மரக்காலும் பக்கலில் தாந்யக் குவியலுமாக நின்ற நிலையைக் கண்டு உருகி மார்க்கண்டேயர்

“ஐ௯ஂ பஹுவியஂ வெூஃ ககயாமஹாவஹுஉபிஉதழ।
சுதெூவ வஹெ ஜெஜெ ஈஉயா ஹஹ ஹஂ த தழ ।
யஹகொடிஹஹாணி பஹூநி நிவஹிஷஂ௱ஹி।
ஞூஈாயிதொமஉஜெஃ ஹிஜெஃ உநஜெஷ௲ விஜெஷதஃ।
உஉஂ தாவஹரஂ ஈஎவஂ ஜிஹாணொ ஹதுவஹு।
ஜெஷவயஉஂகஉாஸ்ரீ தூ விஸஉஂ வாஈஉஂ ஞுஹெஃ ॥”

‘இத்தகைய அன்பைக் காட்டிய தேவரீர் இவ்வினிய தாபஹரமான திருக் கோலத்துடன் இந்தத் தலத்தில் அமரரும் ஸித்தரும் மனிதரும் வணங்க வாழ் வீராக’ என்று ஆதரவுடன் வேண்டினுராம். பரமகாருணிகஞன பரந்தாமன் மார்க்கண்டேயரது வேண்டுகோளுக்கு முன்னம் தான் இருந்த நின்ற திருக் கோலத்தை மாற்றிப் பல தினங்கள் பசித்த மக்களுக்குப் படியளந்து துன்பங்

தீர்த்த சிரமத்திற்குப் பரிஹாரமாக சேஷ சயநத்தில் நன்கு இளைப்பாறும் முத்ரையுடன் ஸேவை ஸாதித்தான். தலைக்குப் பக்கத்தில் மக்களுக்குத் தான் தாந்ய மளந்த மரக்காலையும் விடாமல் வைத்துக்கொண்டான். என்ன தயை! என்ன தயை! ‘ஸுவஜா நஞி ஶாං ஊஜீஸாஃ’ என்று ஜனங்களால் பரிஹஸிக்கப் பட்டும் ஹிதமே செய்யும் இவ்வாபத்பாந்தவன் வாழும் திவ்ய ஸ்தலம் இதுவே. ஆதனூர் என்ற பெயர் கொண்டது. காமதேனுவால் பூஜிக்கப்பட்டபடியால் இந்தப் பெயராம். (ஆ=பசு) ஆதன் என்றும் சிற்றரசன் சத்ருக்களால் துரத்தப்பெற்று நிராயுத பாணியாய்ப் பசியாலும் களைப்பாலும் வருந்த எதிரி கொடிய வாள்கொண்டு வெட்ட வரும்பொழுது ‘ரங்க ப்ரபோ! நீ இருக்கிறுய் என்பது உண்மையோ?’ என்று தன் குலதெய்வமான ஸ்ரீ ரங்கநாதனை நினைத்த தாகவும், ‘நான் இதோ வந்தேன். உளேன்; வருந்தேல்’ என்று ஸர்வாயுத தாரியாய்த் தோன்றி அவனைக் காத்ததாகவும் அவன் மாடமாளிகைகள் எழுப்பிக் கட்டிய ஊராகையால் ஆதனூர் என்றும் பெயர் வந்தது என்பர்.”

பெரியவரது கண்களில் நீர்த்துளிகள் சொட்டின. தமது வெள்ளிய வஸ்த்ர நுனியால் துடைத்துக்கொண்டவண்ணம் ‘இப்படித் தன்னை அழிய மாறியும் சேதநனைக் காப்பதே தொழிலாகக் கொண்ட கருணை வடிவத்தைக் கல்லென்பர் சிலர்; மண் என்பர் சிலர்; முழுப் பொய் என்பர் சிலர். மலையிலே பருக்கைக் கல்லை விசினுற்போல அனந்தமான சக்தி கொண்ட அவனது பெருமையை அது என்ன செய்யும்? அவனது ப்ரபாவத்தை மாத் திரம் நன்றியற்ற மனிதன் உணர்ந்திருப்பானுகில், இப்படி நாஸ்திகத்தில் ஆழ்வானு? யானை எறும்பைத் தேய்ப்பதுபோல இம்மதி கெட்ட மனிதனை ஸர்வநாசம் செய்வது ஒரு பெரிதா? எல்லை யற்ற க்ருபையே வடிவெடுத்த இவ்வுத்தமன் நன்மை யன்றித் தீமை செய்யான். ‘அஞ்சல்! அஞ்சல்!’ என்று அரற்றும் அருள் வடிவம் அல்லவா அவன்? ‘ஸுஹ்யம் ஃவ ஓுஹூமெ தஹெஷூா ஊஶாஷெூ தஶுவ தං ஊஊ’ என்று புலம்புபவன். ‘யஷிவா ஈாவணஃ ஹூயழ’ என்று மாற்றுண்மையிலே மன்னி நின்றவரையுந் தேடிச் சென்று காக்கப் பித்தேறிய பிச்சன். வத்ஸா! வா. இக்கார்முகிலைப் பார்த்து வருவோம்’ என்றுர். ஆனந்த பரவசமாகிய உள்ளத்துடன் பெரியாரைப் பின்பற்றி நடந்தேன். பிறகு மேரு பர்வதத்தின் தாழ்வரையில் கிடந்த காளமேகம் போன்ற ஸ்ரீரங்கநாதனைப் புஜக சயனத்தில் காண்பீர்கள் என்று தல மாஹாத்ம்யத்தில் அப்ஸரஸ்ஸுக் களின் கானத்தில் சொல்லப்பட்டபடி நிமிர்த்திய மாபெருங் கைகளும், வரை யன்ன தோளும், விரிந்து மலைத்தடம் போன்ற மார்பும், அழகிய உதரமும், அதின் வாய் இனிய மணிப் பந்தமும், மாமுடியும், வந்தவரைக் குளிர்ந்து நோக்கும் செய்ய தாமரைக் கண்களும், தலைப்புறத்தே வைக்கப்பெற்று ஒரு கையினுல் அணைக்கப்பெற்ற மரக்காலும் என் கண்களுக்கு விஷயமாயின. ‘கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக் கினியன கண்டோம்’ என்று அக மகிழ்ந்தேன். பெரியவர் மன முருகிப் பாசுரங்களைப் பொழிந்தார். கடைசியில் என்னை நோக்கி ‘பரகாலன் இங்கு வந்த பொழுது ஒரு சிறு பெய ரால் இப்பெருமானைப் புகழ்ந்து மேலே பேசமாட்டாது மூர்ச்சித்தாராம். அவர் அருளிச்செய்ததாவது: ‘ஆதனூ ராண்டளக்கு மையனை’ என்பதே. அவன் உலகை யாண்டு அதற்குப் படியளக்கு மையனல்லவா?’ என்று சொல்லித் தழதழத்த குரலில் ‘ஶாං ஊதீயං ஆ நிவிரூං ஜெதநாஜெதநாகூகழ’ என்று ஏதோ சொன்னர்.

ஸ்ரீ:

புஸ்தகங்கள் வரவு

1. புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் ராஜ ஸபையில் வித்வத் ஸபாத்யக்ஷராயும் தானாதிகாரியாயுமிருந்த ஸ்ரீ. உப. வித்வான் காளி வங்கிபுரம் ரங்காசார்ய ஸ்வாமியால் இயற்றப்பட்ட அடியில்கண்ட க்ரந்தங்கள் வரப்பெற்றோம்.

(தபால் கூலி நீங்கலாக விலை)

				ரூ.	அ.	பை.
1.	மதத்ரய ஸார ஸங்க்ரஹம் (தேவநாகரி லிபி)			12	0	0
2.	அதிகரணார்த்த ஸ்வரஸவிசாரம்	,,	...	0	8	0
3.	ஸ்ரீசார்ங்கபாணிஸ்தவம்	,,	...	0	4	0
4.	ஸ்ரீகோஸகஸ்தவம்	,,	...	0	4	0
5.	ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்தவம்-பாகம் 1	,,	...	0	4	0
6.	ஷை பாகம் 2	,,	....	0	3	0
7.	ஆசார்ய வைபவ ப்ரகாசம் ஸ்ரீவிண்ணகராதீச ஸ்தவம் & கூரேச விஜயம்	,,	...	1	0	0
8.	மத்வபாஷ்யத்தில் 'சுய' சப்த விசாரம்	,,	...	0	3	0
9.	யதிராஜ சதகம் & ஸுதர்சந ஸ்தோத்ரம்	,,	....	1	0	0
10.	ப்ரமாண ஸங்க்ரஹம் (தமிழ்)		...	0	6	0
11.	மோக்ஷவிசாரம் (க்ரந்த லிபி)		....	1	8	0

எல்லா ஸாமான்ய சாஸ்த்ரங்களிலும், மதத்ரய வேதாந்த க்ரந்தங்களிலும் கவிதையிலும் இந்த ஸ்வாமிக்கு இருக்கும் சிறந்த நைபுண்யத்திற்கு இந்த க்ரந்தங்கள் தக்க சான்றாக யிருக்கின்றன. மதத்ரய ஸாரஸங்க்ரஹத்தில் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் இத்த ஸித்தாந்தங்களை அநுஸரித்து ப்ரஹ்ம ஸூத்ராதிகரணார்த்தங்கள் ஸரளமான ச்லோகங்களில் ஸங்க்ரஹிக்கப்பட்டு விவரணமும் செய்யப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் த்ரிமதங்களின் ஸாரார்த்தத்தை எளிதில் தெரிந்துகொள்ள மிகவும் உபயோகப்படும். இந்த ஸ்வாமியின் பகவத் பக்தியும் ஆசார்ய பக்தியும், ஸம்ப்ரதாய ஜ்ஞானமும் ஸ்தோத்ர க்ரந்தங்களில் நன்கு புலனாகின்றன. மோக்ஷவிசாரம் என்னும் க்ரந்தத்தைப் பற்றி முன்பே ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறது.

இப்புஸ்தகங்கள் வேண்டுவோர் கார்யதர்சி, ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபை, தேரழுந்தூர் போஸ்டு (Via) குத்தாலம், தஞ்சை ஜில்லா என்ற விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

2. **பூர்வாசார்யர் வைபவம்.** விலை ரூபா 1—8—0. கிடைக்குமிடம்—க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம். காஞ்சீபுரம் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியையும் அந்த ஸ்வாமியின் க்ரந்தங்களைப்பற்றியும் அறியாதார் இலர். இவ்வருஷம் ஷை ஸ்வாமிக்கு ஷஷ்ட்யப்த பூர்த்திவைபவம் நடக்கப்போவதையொட்டி பல க்ரந்தங்கள் வெளிவரப் போவதாக அறிகிறோம். அப்படிப்பட்ட க்ரந்தங்களில் இப்புஸ்தகமும் ஒன்று. இதில் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஸ்ரீ நாதமுனிகள் தொடக்கமான ஆசார்யர்களின் வைபவத்தை தமது அஸாதாரணமான ரீதியில் நன்கு எழுதியிருக்கிறார்.

3. **ஸ்ரீராம கானாமுதம்.** இயற்றியவர் ராமாயண கலாமணி ஸ்ரீ. சி. வி. ரா. விலை அணா 12. கிடைக்குமிடம் ஸ்ரீ. K. சுதர்சனாசாரியர், ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர் கிராமம் களத்தூர் போஸ்ட் (வயா) காவேரிப்பாக்கம். N. A. Dt.

இந்நூலில் ஸ்ரீமத் ராமாயணம் ஸுந்தரகாண்டத்தின் கதை செவிக்கினிய தமிழ் பாடல்களால் பாடப்பட்டிருக்கிறது. குழந்தைகளும் ஸ்த்ரீகளும் நன்கு புரிந்துகொள் ளும்படி எளிய தமிழில் ராகத்துடன் அமைத்திருக்கும் பாடல்கள் மிகவும் ரஸமா யமைந் திருக்கின்றன. குழந்தைகளைக் கண்ட கண்டப்பாட்டுகளை யெல்லாம் பாடச் செய்யாமல் இம்மாதிரி பகவத் ப்ரபாவத்தை விளக்கும் இனிய பாடல்களைப் பாடச் செய்வது பெற் றோர் கடமை.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ தேசிகன் சாத்துமறையும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும்

மழையின்றி மாநிலம் வருந்துவது தவிர்கைக்கும், பஞ்சம் பிணிகள் நலிவது நீங்கு கைக்கும், ஒரு மண்டலம் ப்ரதி திநம் ஸாயம், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம், அவளூர் அக்ரஹார விதியில் ஸ்ரீ ஆழ்வார் ஸபையின் சார்பில், ஸ்ரீ வைஷ்ணவர்களால் நடத்தப்பட்டு வருகின்ற தென்றும், இப்பாராயணத்தின் சாத்துமறையையும் ஸ்ரீதேசிகன் சாத்துமறையையும் ஒன்று சேர்த்து ஸ்ரீ ஸந்நிதியில் ஒரு மஹோத்ஸவமாகக் கொண்டாட வேண்டு மென்றும், சென்ற மாஸத்து ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவிலும் தனிப் பத்ரிகைகளிலும் ப்ரசுரித்துத் தெரிவித்திருந்தோம். அதன்படி, பாராயணத்தின் சாத்துமறை புரட்டாசிமீ 9௳ (25—9—50) திங்கட்கிழமை ஸம்பவித்ததால், அன்றே ஸ்ரீ தேசிகன் சாத்துமறையும் கொண்டாடப்பட்டது. இம்மஹோத்ஸவத்துக் கென்று சென்னை பெருமாள் கோவில் முதலிய இடங்களினின்றும், மற்றும் சுற்றுப்புற அக்ரஹாரங்களினின்றும், ஸ்ரீ வைஷ் ணவர்கள் பலர் எழுந்தருளியிருந்தனர். காலையில் சத்ர சாமராதி வாத்ய கோஷங்களுடன் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அக்ரஹார வீதியில் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணத்தை விமர்சையாய் நடத்திப் பூர்த்தி செய்தார்கள். அநந்தரம் 'தாமல் வாய்க்கால்' என்று வழங்கப்படும் 'ஸர்ப்ப நதி'யிலிருந்து மேள வாத்யங்களுடன் ஸ்வஸ்திவாசந புரஸ்ஸரம் திருமஞ்ஜந தீர்த்தம் கொண்டுவரப்பட்டு, பெருமாள் தாயார் ஸ்ரீ தேசிகன்—இம்மூன்று திருநாமங்கட்கும் ஸாங்கமாகத் திருமஞ்ஜநம் பண்ணப்பட்டது. ராத்ரி பெருமாளுக்கும் ஸ்ரீ தேசிகனுக்கும் அத்யாச்சர்யமாக வீதிப் புறப்பாடாயிற்று. பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளினதும், ஸ்ரீ தேசிகன், பெருமாளையும் தாயாரையும் மங்களாஶாஸநம் செய் தருளி மர்யாதை கண்டருளினார். அநந்தரம் பெருமாள் விசேஷ சாத்துமறை கண்டருள, ராத்ரி சுமார் 11-மணிக்குப் பல்வகைச் சித்ராந்ந விநியோகாதிகளுடன் மஹோத்ஸவம் இனிது முடிவடைந்தது.

இப்பாராயணத்தி னிடையில், ஸமீபத்தில், நல்ல மழை பெய்து ஏரிக்கு க்ருஷிக்கு அநுகூலமாய் சுமார் ஒரு மாஸம் பாயும்படி ஜலம் வந்திருக்கிற தென்பது கவனிக்கத் தக்கது. "வன்பெரு வானக முய்ப்ப வமருய்ப்ப, மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய, துன்பமிகு துயரகலவயர்வொன்றில்லாச் சுகம் வளர வக மகிழும்தொண்டர் வாழ......" என்று பொன்புரையும் வேற்குலசேகரன் பணித்தது என்றும் பழுதாகா தென்பது எமது த்ருடாத்யவஸாயம்.

பி. நரஸிம்மாசார்யர்

அவளூர், 27—9—50 } பு. நரஸிம்மாசார்யர்

[ஆழ்வார் ஸபைக் கார்யதர்சிகள்]

* * * * * * *

கல்கத்தாவில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம்

கலி 4370-வது விபவ (இங்கிலீஷ் 1268) வருஷத்தில் உத்தமமான புரட்டாசித் திருவோணத் திருநாளில் முத்திதருநகரேழில் முக்யமாங் கச்சிதனில் அவதரித்தது, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் தத்வ ஹித புருஷார்த்தங்களை நிரூபித்து, அதை உண்மையான வைதிக ஸித்தாந்த மென்று நிலை நாட்டிய நமது தூப்புல் வள்ளலின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை வழக்கம்போல் இந்த ஸம்வத்ஸரத்திலும் பக்தர்கள் அனை வரும் கலியின் கோலாஹலத்தைப் பொருட்படுத்தாமல், ஒன்றுகூடி, இருகையுங் கூப்பி, "தொண்டருகக்குந் துணையடி வாழி......வாழி நினவடிவே" என்றும், "ஜய ஜய மஹா தேசிக! நிகமாந்த மஹாதேசிக! கவிதார்க்கிக களப வ்ரஜ கபளீக்ருதி ஸிம்ஹ! இன்னமொரு நூற்றாண்டு வாழ்க" என்றும் கோஷித்து, ச்ரத்தா பக்தியுடன் நடப்பித் தனர். இவ்வித வைபவங்கள் மேன்மேலும் அபிவ்ருத்தமாம்படி ஸ்ரீசரண்யன் அநுக்ர ஹிப்பானாக.

வாங்கல் ந. நாராயண தாஸன்

* * * * * *

திருச்சேறையில் ஸ்ரீ தேசிகன் உத்ஸவம்

பஞ்சஸார க்ஷேத்ரமென்று ப்ரஸித்தி பெற்றதும் 'செல்வத் தண் சேறை' என்று திருமங்கை மன்னனால் மங்களாசாஸநம் செய்யப் பெற்றதுமான இத்திவ்ய தேசத்தில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுக்கு சென்ற வர்ஷமபோல் இவ்வர்ஷமும் அவதார மஹோத்ஸவம் அத்யத்புதமாய் 22—9—50 முதல் 1—10—50 வரை நடந்தேறியது. ஸ்ரீ அழகிய சிங்கரால் ஸ்தாபிக்கப்பட்ட மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத வேத சாஸ்த்ர திவ்ய ப்ரபந்த பாடசாலையில் அத்யயநம் செய்து உத்தீர்ணர் களான வித்யார்த்திகள் ப்ரப்ந்த கோஷ்டியை அலங்கரித்து அத்யாபக கைங்கர்யத்தை பூர்த்தி செய்து வைத்தார்கள். சாற்றுமறை தினத்தன்று ஸ்ரீஸார பூஷ்கரிணியில் தீர்த்த வாரி நடந்தது. இரவு சாற்றுமறை வெகு விமர்சையாக நடந்தது. ஸ்வாமிகளுக்கு யதார் ஹம் ஸம்பாவனையும் செய்யப் பட்டது. இக் கைங்கர்யத்திற்கு ஆஸ்திக ஜனங்களின் ச்ரத் தையும் ஆசார்யவள்ளலின் அநுக்ரஹமும்தான் முக்கிய காரணம்.

பரம்பரை ஆதீனகர்த்தா

3—10—50. ரே. ராமஸ்வாமி பாட்ரா சாரியர்

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு: 1950ஆ செப்டம்பர்மீ

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.	வர்ஷம்	தொகை. ரூ.
11	ஸ்ரீ	K. ராகவாசாரியர், பம்பாய்	49—50	6
109	,,	K. S. சுந்தரராஜ ஐயங்கார், நாகப்பட்டினம்	50	3
135	,,	T. மாணிக்க நாயகர், சேலம்	50	3
169	,,	C. M. வெங்கடராகவாசாரியர், ஹைதராபாத்	50	3
201	,,	V. K. பார்த்தஸாரதி அய்யங்கார், திருவல்லிக்கேணி	49—50	6
225	,,	A. மாதவ ஐயங்கார், பெங்களூர்	50	3
228	,,	T. K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், தில்லையம்பூர்	50	3
231	,,	P. S. வீரராகவாசாரியர், தேவனார்விளாகம்	49—50	6
240	,,	ராவ்ஸாஹிப் D. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், நடுவக்கரை	49—50	6
246	,,	M. S. விஜயராகவாசாரியர், சோகத்தூர்	50	3
274	,,	M. சடகோபாசாரியர், ஒரகடம்	50	3
276	,,	V. சக்ரவர்த்தியாசாரியர், கல்யாணபுரம்	50	3
284	,,	K. N. தேசிகாசாரியர், திருவள்ளூர்	50	3
357	,,	கோபாலஸாமி ஐயங்கார், திருவிடைமருதூர்	50	3
373	,,	முத்துவிஜயவெங்கடாசலபதி ரெட்டியார், கூட்டேர்பட்டு	50—51	6

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.	வர்ஷம்	தொகை. ரூ.
402	ஸ்ரீமதி	N. ரங்கம்மாள், திருவல்லிக்கேணி	50	3
409	ஸ்ரீ	ஸ்ரீநிவாஸ ஐயங்கார், திருவல்லிக்கேணி	50	3
410	,,	அப்பா ஸ்ரீநிவாஸ ஐயங்கார், புதுடெல்லி	50	3
412	,,	S. நாராயண அய்யங்கார், உளுந்தூர்பேட்டை	50	3
424	,,	R. குப்புஸாமி அய்யங்கார், திருவெண்ணெய்நல்லூர்	50	3
437	,,	கோபால ஸ்ரீநிவாஸாசாரியர், காரைக்குரிச்சி	50—51	6
452	,,	K. கோபாலன், Manager, The Hindu, சென்னை	49—50	6
460	,,	R. ராம ஐயங்கார். P. T. சென்னை	50	3
470	,,	C. R. ஸ்ரீநிவாஸ பாட்ராசாரியர், கும்பகோணம்	47	3
483	,,	P. V. ராமஸ்வாமி அய்யங்கார், புகலூர்	50	3
486	,,	N. V. சாரி, பம்பாய்	50	3
494	,,	சேஷ அய்யங்கார், பொன்மலை	49—50	6
550	,,	A. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், தி. நகர், சென்னை	48, 49, 50	9
556	,,	V. ஸந்தானகோபாலன், ஹைதராபாத்	49—50	3
560	,,	R. S. அய்யங்கார், கல்கத்தா	50	3
597	,,	S. K. ஸ்ரீநிவாஸாசாரியர், சோகத்தூர்	50	3
598	,,	S. R. S. ராகவன், மாதுங்கா, பம்பாய்	50	3
603	,,	T. வேதாந்தாசாரியர், மயிலாப்பூர்	49—50	6
624	,,	M. S. கோவிந்தராஜன், கோயம்புத்தூர்	50—51 pt.	5
638	ஸ்ரீமதி	செல்லம்மாள், அன்னுதூர்	48 49.50	9
645	ஸ்ரீ	T. M. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், தண்டரை	49—50	6
684	,,	B. ரங்கஸாமி ஐயங்கார், காஞ்சீபுரம்	50	3
687	,,	R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், நாகப்பட்டினம்	50	3
704	,,	S. சடகோபாசாரியர், கும்பகோணம்	50	3
708	,,	N. பார்த்தஸாரதி, மயிலாப்பூர்	49—50	6
716	,,	K. பத்மநாப ஐயங்கார், திருவனந்தபுரம்	50—51 pt.	$3\frac{1}{2}$
733	,,	T. பார்த்தஸாரதி ஐயங்கார், தேவகோட்டை	47 to 50 pt.	$11\frac{1}{2}$
739	,,	G. நரஸிம்ஹ அய்யங்கார், ஜெம்ஷட்பூர்	49—50	6
742	,,	R. கிருஷ்ணன், B. E., கிருஷ்ணகிரி	50 pt.	2
750	,,	A. ரங்காசாரியர், கல்கத்தா	50—51	6
761	,,	V. S. D. ஆசார்யா, மாதுங்கா, பம்பாய்	49	3
780	,,	R. வீரராகவ அய்யங்கார், கும்பகோணம்	50	3
785	,,	ராவ்பஹதூர் C. V. விஜயராகவாசாரியர், பம்பாய்	50	3
795	,,	T. துரைசாமி அய்யங்கார், ஒலக்கூர்	50 pt.	$\frac{3}{4}$
809	,,	K கோபாலகிருஷ்ணமாசாரியர், குண்டூர்	50	3
980	,,	C. K. ஸ்ரீநிவாஸாசாரியர், திருப்பதி	50	3
1020	,,	C. V. A கிருஷ்ணன், சேலம்	50	3
1021	,,	P. முத்துஸாமி நாயகர், சேலம்	50	3
1022	,,	T. குமாரஸாமி செட்டியார், சேலம்	50	3
		ஆகமொத்தம் ரூ.		$226\frac{3}{4}$
*840	ஸ்ரீ	S. சேஷாத்ரிநாதன், வடக்குப்பட்டு	50	3
*899	,,	V. ஸௌந்தரராஜ அய்யங்கார், மதுரை	50	3

* இவர்கள் முன்பே சந்தா அனுப்பியிருந்தும் சந்தா நெ. முதலிய விபரங்கள் இப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டன.

இம்மாதிரி அஸௌகரியங்கள் நேராவண்ணம், சந்தாதாரர்கள், தங்களது சந்தா நெ. முழுவிலாஸம் முதலியவைகளை M. O. கூபனில் தெளிவாக எழுதியனுப்பப் பிரார்த்திக்கிறோம்.

இந்த முண்டகோபநிஷத் வாக்யத்திற்கு உபநிஷத் பாஷ்யாதிகளில் விதி பலத்தினாலே ஸாங்கமாக வேதத்தை அத்யயநம் பண்ணின முதல் மூன்று ஜாதி மனிதனுக்கு வேத வாக்யங்களுடைய அர்த்தங்களில் ஆபாத ஜ்ஞாநம் ஸம்பாவிதமாகையினால், சாதுர்மாஸ்ய மென்கிற யாகத்தைப் பண்ணினவனுக்கு ஶாச்வதமான ஸுக முண்டாகிற தென்று சொல்கிற வாக்யமும் இன்னும் வாக்யங்களும் கர்மங்களினால் நித்யமான ஸுக முண்டாகிற தென்று சொல்லுகிறபடியினால், நித்ய ஸுகங்களில் ஆசையினால் அவன் அந்த கர்ம பல விசாரத்தில் ப்ரவர்த்தித்து நித்ய ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய கர்மங்கள் ஒன்றுமில்லை யென்று நிச்சயித்த பிறகு, அந்தப் புண்ய கர்ம பலன்களான அநித்ய ஸ்வர்க்க ஸுகங்களில் வைராக்யத்தினால் அவைகளை அநாதரித்து, ஶாச்வதமான மோக்ஷ ஸுகத்தில் ஆஸ்தையினால் அதை, அடையமுடியாமல் ஸம்ஸார துக்கங்களை அநுபவித்து நிற்கிற ஸ்வாத்ம விஷயத்தில் நிர்வேதத்தை அடைந்தானாகில், அப்படி நிர்வேதத்தையடைந்தவன் அந்த ஶாச்வத ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய பரமாத்மாவைத் தெளிய உபதேசிக்கக் கூடிய ஆசார்யனை ஆச்ரயித்து அவனுடைய உபதேச மூலமாகவே பரம புருஷனைத் தெரிந்துகொள்ளவேணு மென்கிற அர்த்தத்தை விதிப்பதாக வ்யாக்யாநம் பண்ணப்பட்டது.

இங்கு இவ்வுலகத்துப் போகங்களில் வைராக்யத்தையும் சொல்லவேண்டியது அவச்யமாக இருக்க, அதைச் சொல்லாததற்குக் காரணம் இவ்வுலகத்தின் சிற்றின்பங்களெல்லாம் அல்பத்வம், அஸ்திரத்வம், துக்கமூலத்வம், துக்கமிச்ரத்வம், துக்கோதர்க்கத்வம், விபரீதாபிமாநமூலத்வம், ஸ்வாபாவிகாநந்தவிருத்தத்வம் என்கிற ஏழு வித தோஷங்களோ டிருக்கையாலே

" யே ஹி ஸம்ஸ்பர்ஶஜா போகா து:கயோநய ஏவ தே ।
ஆத்யந்தவந்த: கௌந்தேய ந தேஷு ரமதே புத: "

என்கிற கீதா வாக்யத்தின்படியே தோஷங்கள் நிறைந்த விஷயங்களில் தோஷ ஜ்ஞாநமுடையவனுக்கு (ரமணம்) ஆசையுண்டாகாதே அவைகளில் (உபரமமே) வைராக்யமே உண்டாகு மென்பதுதான். இப்படி தோஷங்களே நிறைந்திருக்கும் இவ்வுலகத்துச் சிற்றின்பங்களை மனிதர்கள் பெரும்பாலும் ஆசைப்படுவதற்குக் காரணம் பகுத்தறிவு இல்லாமைதான் என்கிற விஷயத்தை

" அபரீக்ஷ்யைவ ஹி நர: ப்ராயோ லோகஸ்ஸு வஞ்ச்யதே ।
யாமேவ த்யஜதே லோகோ வக்த்ராஸவம் திரஸ்க்ருதா "

[இவ்வுலகம் வஸ்துக்களின் ஸ்வபாவங்களை மனதினால் ஆராய்ந்து பார்க்காததினால் விஷயங்களினால் வஞ்சிக்கப்படுகிறது. உலகமெல்லாம் எந்த எச்சில் ஜலத்தை ஜுகுப்ஸையினால் நெஞ்சு நடுங்கி அசுத்தமான இடத்தில் உமிழ்ந்து விடுகிறதோ, அந்த எச்சிலையே காமினியான ஸ்த்ரீயின் அதராம்ருத மென்று ஆசைப்படுகிறதுதான் இதற்கு உதாஹரணம்] என்று ப்ரஹ்லாதாழ்வான் சொல்லுவதாலும், இவ்வுலகத்து விஷயங்களி லுள்ள தோஷ ஸப்தகங்களும், மற்றும் பிணி பசி மூப்பு துன்பங்களும் பெரும்பாலு மில்லாததோடு இவ்வுலகத்தி லில்லாத பல பேரின்

பங்களேயு முடைய ஸ்வர்க்க ஸுகங்களில் அநித்யத்வாதி சில தோஷங்க ளிருப்பதைக் கண்டு, அந்த ஸ்வர்க்கமும் வேண்டா மென்று அநாதரித்திருக்கிற விவேகமுடைய முமுக்ஷுவுக்கு இவ்வுலகத்துச் சிற்றின்பங்களில் தோஷங்களே நிறைந்திருக்கையாலே இவ்வுலகத் தின்பங்களில் வைராக்யம் கைமுதிக ந்யாயஸித்தமாகையினுலும், ப்ரத்யக்ஷ ஸித்தமான இந்த விஷயத்தில் சாஸ்த்ர மூலமான உபதேசம் வேண்டியதில்லே யாகையினுலும், பூர்வாசாரியர்கள் இவ்வுலகத்து விஷய வைராக்யத்தையும் இந்த ச்ருதியின் தாத்பர்யமாக அருளிச் செய்யவில்லே. ஆனுலும் ஸித்தாந்தத்திற்கு விரோத மில்லாத ப்ராமாணிக விஷயங்களே ச்ருதியின் ஶப்த ஸ்வாரஸ்யங்களே அநுஸரித்துச் சொல்வது ஶிஷ்டாசார ஸித்த மாகையினலே, விவேகமுள்ள மனிதனுக்கு ஸமீசீந ப்ரத்யக்ஷத்தினுலேயே இவ்வுலகத்துச் சிற்றின்பங்களில் வைராக்ய முண்டாகு மென்பதையும் பரலோகத்துப் பேரின்பங்களிலும் கர்ம காண்ட விசாரத்தினுல் வைராக்ய முண்டாகு மென்பதையும் மந்தமதிகளின் உபகாரார்த்தமாக இந்த ச்ருதி மூலமாகவே இங்கு நிரூபிக்கிறேும்.

இங்கு இதற்கு முன்பு பூர்வாசார்யர்களால் எழுதப்படாத புதிய அர்த்தங்களே நாம் ஆதரிக்கக்கூடாதென்று சிலர் நினைக்கலாம். இந்த விஷயத்தைக் குறித்து ஸ்ரீ தேசிகன் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில்,

“ தஶாகெவ நூதநம் ஸவ ஜாய தூ஛ாம் அ வஹுாதநஓ ।
ந ஜொஷாயெ தஶஹயம் ந ஹாணாய அ கூஷு தெ ॥ ”

[எந்த விஷயங்களும் உண்டாகிற ஸமயத்தில் புதியதுதான் ; சிறிது காலம் கழிந்தால் அவைகளே பழையவைக ளாகின்றன. ஸர்வ வஸ்துக்களிலும், இவ்விரண்டு தன்மைகளு மிருப்பதினுல் ஒன்றை ஆதரிப்பதற்கோ அல்லது ஒன்றை அநாதரிப்பதற்கோ புதியது என்பதும் பழையது என்பதும் காரணமாகாது] என்றருளிச்செய்தார். தவிரவும் புதிய விஷயங்களே அநாதரிப்பதானுல் நம் பூர்வாசாரியர்களால் எழுதப்பட்ட க்ரந்தங்கள் நமக்குத் தெரியாத அபூர்வ விஷயங்களேத் தெரிவிப்பதற்காகவே பெரும்பாலும் எழுதப்பட்டிருக்கின்றன வாகையினுல், அவைகளேப் புதியது என்கிற காரணத்தினுல் அநாதரிக்க வேண்டியதாக முடியும். ஆகவே, ப்ரமாணங்களுக்கு விரோத மில்லாத விஷயங்கள் புதியனவானுலும் ஆதரிக்கப்படலாம்.

இங்கு ‘ப்ராஹ்மண:’ என்கிற ஶப்தத்திற்கு ‘ப்ரஹ்ம க்ஷணதி’ என்கிற நிருக்தத்தை யநுஸரித்து, க்ஷணயாதுஶப்தம் ரக்ஷணம் என்கிற இரண்டு அர்த்தத்திலும் ப்ரஸித்தமாயிருப்பதால், ‘வேதத்தைச் சொல்லுகிறவன், ரக்ஷிக்கிறவன்’ என்று அர்த்தம் சொல்லுவது உசிதம். இந்த வேத வாக்யத்தில் ‘ஸ:’ என்றிருப்பதை அநுஸரித்து ‘ய:’ என்பதைச் சேர்த்துக்கொள்ளவேணும். ஆதராதிஶயத்தினுல் ‘பரீக்ஷ்ய’ என்கிற பதம் முந்தியே சொல்லப்பட்டது. பஹுவசநாந்தமான லோக ஶப்தம் ‘லோக்யந்தே இதி லோகா:’ என்கிற வ்யுத்பத்தியினுல் இவ்வுலகத்தில் ப்ரத்யக்ஷஸித்தங்களான ஸ்தாவர ஜங்கம

மநுஷ்ய ரூபங்களான ப்ராணிகளை விஶிஷ்ய சொல்லுகிறதோடு மற்றும் ப்ரத்ய க்ஷத்தினுல் அறிய முடியாதவைகளாய் ஶாஸ்த்ரத்தினுலேயே அறியவேண்டிய ப்ராக்ருதங்களான 14-லோகத்தின் ப்ராணிகளையும் சொல்லுகிறது. '𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌨𑍁' என்பதினுல் ஸர்வ ப்ராணிகளும்,

" 𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌮𑌰𑌣𑌂 𑌜𑌨𑍍𑌤𑍋𑌃 𑌗𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ।
𑌶𑌾𑌜𑌨𑍁 𑌤𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑍇𑌨 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑌾𑌤𑌾 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌭𑌵𑌯𑍋𑌃 ॥ "

[பிழைத்திருப்பது, இறந்துபோவது, லோகாந்தரங்களுக்குப் போவது, ஸுகம் துக்கங்களை அநுபவிப்பது முதலிய ஸர்வ கார்யங்களும் ப்ராணிகளுக்கு தான் முன் ஜந்மங்களில் செய்த புண்ய பாப ரூபங்களான கர்மாதீநமாகத்தான் உண்டாகின்றன. கர்மாதீந மல்லாமல் மற்றென்றுல் உண்டாகிறதில்லை] என்கிற படியே புண்ய பாப ரூபங்களான கர்மங்களினுல் சூழ்ந்திருப்பது தெரிவிக்கப் படுகிறது. '𑌪𑌰𑍀𑌤𑌃 𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯' என்கிற ஶப்தம் நன்றாக ஆராய்ந்து பார்ப்பதைச் சொல்லுகிறது. அதாவது : ஸர்வ ப்ராணிகளையும் அவற்றிலுள்ள ப்ரகார பேதங்கள் எல்லாவற்றோடு ஸம்ஶய விபர்யய மில்லாதபடி அறிவதே யாகும்.

அவற்றுள் இந்த உலகத்திலுள்ள ப்ராணிகளுக்குள் தாழ்ந்தவைகளாய் ஸ்தாவரங்களான மரஞ் செடிகளை ஸர்வ ப்ரகாரத்தினுலும் அறிவதாவது : மனிதர்களுக்கு ஸுகாநுபவத்திற்கு ஸாதநங்களான கண் காது முதலிய இந்த்ரியங்களிருப்பன போல, மரங்களுக்கும் இருக்கின்றன.

" 𑌊𑌷𑍍𑌮𑌤𑍋 𑌮𑍍𑌲𑌾𑌯𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑍍𑌵𑌕𑍍𑌫𑌲𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑍇𑌵 𑌚 ।
𑌮𑍍𑌲𑌾𑌯𑌤𑍇 𑌶𑍀𑌰𑍍𑌯𑌤𑍇 𑌚𑌾𑌪𑌿 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌸𑍍𑌤𑍇𑌨𑌾𑌤𑍍𑌰 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ "

[மரங்களுடைய இலை பட்டை பழம் புஷ்பம் இவைகள் வெயிலினுல் வாடிப்போவதாலும், வெடித்துப்போவதாலும், மரங்களுக்கு ஸ்பர்ஶத்தைத் தெரிவிக்கிற த்வக் என்கிற இந்த்ரியம் இருக்கிறது.]

" 𑌵𑌾𑌯𑍍𑌵𑌗𑍍𑌨𑍍𑌯𑌶𑌨𑌿𑌨𑌿𑌰𑍍𑌘𑍋𑌷𑍈𑌃 𑌫𑌲𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌵𑌿𑌶𑍀𑌰𑍍𑌯𑌤𑍇 ।
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇𑌣 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌪𑌾𑌦𑌪𑌾𑌃 ॥ "

[காற்று அக்நி இடி இவைகளுடைய ஶப்தங்களினுல் மரங்களுடைய பழங்கள் புஷ்பங்கள் பிளந்து போகிறபடியினுலும், ஶப்தமானது ச்ரோத்ரம் என்கிற இந்த்ரியத்தினுலேயே அறியக்கூடிய தாகையினுலும், மரங்கள் காதினுல் ஶப்தத்தைக் கேட்கின்றன.]

" 𑌵𑌲𑍍𑌲𑍀 𑌵𑍇𑌷𑍍𑌟𑌯𑌤𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌶𑍍𑌚𑍈𑌵 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌨𑌹𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌶𑍍𑌚 𑌮𑌾𑌰𑍍𑌗𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑌾𑌦𑌪𑌾𑌃 ॥ "

[கொடிகள் மரத்தைச் சுற்றிக்கொண்டு படர்கின்றன. அவை படர்ந்து போகக் கூடிய இடங்களிலேயே படர்ந்து வளருகின்றன. கண்ணில்லாமல் மார்க்கத்தில் நடந்துபோக முடியாது. ஆகையினுல் மரங்கள் கண்களினுல் பார்க்கின்றன.]

"𑌸𑍁𑌗𑌨𑍍𑌧𑍈𑌰𑌿𑌤𑌰𑍈𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑍈𑌰𑍍𑌧𑍂𑌪𑍈𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌰𑌪𑌿 ।
𑌅𑌰𑍋𑌗𑌾𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑌿𑌘𑍍𑌰𑌨𑍍𑌤𑌿 𑌪𑌾𑌦𑌪𑌾𑌃 ॥"

[நல்ல வாஸனையை யுடைய த்ரவ்யங்களையோ அல்லது துர்க்கந்தத்தையுடைய த்ரவ்யங்களையோ நெருப்பினல் கொளுத்தி அதிலுண்டாகிற புகையினல் சிற்சில மரஞ் செடிகளைச் சூழ்ந்திருக்கும்படி செய்வதினல், மரங்களுடைய சில வ்யாதிகள் போய்விடுவதையும், புஷ்பிக்காத செடிகளில் புஷ்பம் உண்டாவதையும் பார்க்கிறபடியினல், மரங்கள் மூக்கினல் வாஸனையை அறிகின்றன.]

"𑌪𑌾𑌦𑍈𑌃 𑌸𑌲𑌿𑌲𑌪𑌾𑌨𑌾𑌚𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌧𑍀𑌨𑌾𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ।
𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌰𑌸𑌨𑌂 𑌦𑍍𑌰𑍁𑌮𑍇 ॥"

[மரங்களின் வேரில் ஜலத்தைக் கொட்டுவதினல் வாடியிருந்த இலைகளின் வாட்டம் போய்ப் பசுமையோடிருப்பதாலும், மரங்களுக்கு வ்யாதி உண்டாவதாலும், வ்யாதிக்குப் பரிஹாரமான காரியங்களினல் வ்யாதி போய்விடுகிறபடியினலும், மரங்களுக்கு நாக்கு இருக்கிறதென்று நிச்சயிக்கவேணும்.]

"𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑍇𑌣𑍋𑌤𑍍𑌪𑌲𑌨𑌾𑌲𑍇𑌨 𑌯𑌥𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌜𑌲𑌮𑌾𑌦𑌦𑍇𑌤𑍍 ।
𑌤𑌥𑌾 𑌪𑌵𑌨𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌾𑌦𑍈𑌃 𑌪𑌿𑌬𑌤𑌿 𑌪𑌾𑌦𑌪𑌃 ॥"

[மனிதன் நீலோத்பல புஷ்பத்தின் தண்டின் த்வாரத்தின் வழியாக எப்படி வாயில் ஜலத்தை க்ரஹிக்கிருனே, அப்படியே மரங்கள் காற்ருேடு சேர்ந்து கால்களினல் ஜலத்தைக் குடிக்கின்றன] என்று பாரதம் சாந்திபர்வம் 182-ம் அத்யாயத்தில் சொல்லுகிறபடியே, ஸர்வேந்த்ரியங்களு மிருந்தாலும் அவ்விந்த்ரியங்கள் மனிதர்கள் விஷயத்தில் ஸுகாநுபவத்திற்கு ஹேதுவாக இருப்பதுபோலன்றிக்கே, '𑌶𑌰𑍀𑌰𑌜𑍈𑌃 𑌕𑌰𑍍𑌮𑌦𑍋𑌷𑍈𑌃 𑌯𑌾𑌤𑌿 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌤𑌾𑌂 𑌨𑌰𑌃' என்கிற மநு வசநத்தின்படியே முந்திய மநுஷ்ய ஜந்மத்தின் தேஹ மூலமாகப் பண்ணப்பட்ட மஹாபாப கர்மஜந்மங்களான மரங்கள் விஷயத்தில் அவ்விந்த்ரியங்கள்

"𑌵𑌯𑌮𑌗𑍍𑌨𑌿𑌂 𑌤𑌥𑌾 𑌶𑍀𑌤𑌂 𑌵𑌰𑍍𑌷𑌂 𑌚 𑌪𑌵𑌨𑌂 𑌤𑌥𑌾 ।
𑌸𑌹𑌾𑌮𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌤𑌥𑌾 𑌛𑍇𑌦𑌨𑌭𑍇𑌦𑌨𑍇 ।
𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌵𑌿𑌹𑌤𑌾𑌨𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 𑌨 𑌪𑍁𑌨𑌰𑍍𑌹𑌨𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ।"

[நாங்கள் நெருப்பையும், பனியையும், மழையையும், காற்று முறிப்பதையும், மனிதர்கள் வெட்டிப் பிளந்திடுவதையும் எப்பொழுதும் ஸஹித்துக்கொண்டிருக்கிருேம். காலில்லாத ஸ்வபாவத்தினல் இப்படிக் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிற எங்களைத் தாங்கள் மறுபடியும் ப்ரஹ்மஹத்யை பாபத்தையும் கொடுத்து ஹிம்ஸிக்கலாமோ?] என்று பாரதம் சாந்திபர்வம் 288-ம் அத்யாயத்தில், மரங்கள் பிரஹ்மதேவனைக்குறித்துச் சொன்னதுபோல் எப்பொழுதும் துக்காநுபவ மாத்ரத்திற்கே ஹேதுக்களா யிருப்பதையும், ஸ்ரீ க்ருஷ்ண பகவான் இடையர்களைப் பார்த்து

"𑌪𑌶𑍍𑌯𑌤𑍈𑌤𑌾𑌨𑍍 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾𑌨𑍍 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌜𑍀𑌵𑌿𑌤𑌾𑌨𑍍 ।
𑌵𑌾𑌤𑌵𑌰𑍍𑌷𑌾𑌤𑌪𑌹𑌿𑌮𑌾𑌨𑍍 𑌸𑌹𑌨𑍍𑌤𑍋 𑌵𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨𑌃 ॥"

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[சென்ற ஆவணிஸ்ரீ ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உ.ப. வித்வான் தூப்புல் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ப்ரஹ்மதேசம்]

57 [illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

58 [illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

59 [illegible]
[illegible] ॥

60 [illegible]
[illegible] ॥

61 [illegible]
[illegible] ॥

62 [illegible]
[illegible] ॥

63 [illegible]
[illegible]

64 [illegible]
[illegible] ॥

65 [illegible]
[illegible] ॥

66 [illegible] ।
[illegible] ॥

67 [illegible] ।
[illegible] ॥

68 [illegible] ।
[illegible] ॥

69 [illegible] ।
[illegible] ॥

70 [illegible] ।
[illegible] ॥

71 [illegible] ।
[illegible] ॥

72 [illegible] ।
[illegible] ॥

73 [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

74 [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

—•○✕○•—

" வித்தகன் வேதியன் வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல்
மெய்த்தவன் உத்தமன் வேங்கடநாதன் வியன்கலைகள்
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக்
கைத்தவன் என்றுரைத்தேன் கண்டிலேன் என் கடுவினையே "

—பிள்ளையந்தாதி

ஸ்ரீ தேசிகன் திருநாமங்கள்

" ஓரொன்று தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு " என்னும் புகழ் ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுடைய அருளிச் செயல்களுக்கு மட்டுமின்றி, அவ்வாசார்ய வள்ளலது அநேகங்களான திருநாமங்களுக்கும் நன்கு பொருந்தும். வேங்கடநாதன், கண்டாவதாரர், கவிதார்க்கிக கேஸரீ, வேதாந்தாசார்யர், வேதாந்த குரு, வேதாந்த தேசிகன், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர், தூப்புல்பிள்ளை, தேசிகன், என்பன போன்ற பல திருநாமங்கள் இவ்வாசார்ய ச்ரேஷ்டருக்கு ப்ரஸித்தங்களாக அமைந்துள்ளமையை அனைவரு மறிவர். ஒவ்வொன்றும் ஒரு காரணத்தை யிட்டே ஏற்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் அவர் ஒருவருக்கே தகும் என்ற முறையில் விளங்குவது. ஒரு நிகழ்ச்சியை யொட்டியே ஏற்பட்டிருப்பன அவற்றுள் பல. பல நாமங்களை ஸ்வாமி தேசிகன் தமது திவ்ய ஸூக்திகளிலே தாமே கையாண்டிருக்கிறார். இவைகளை யெல்லாம் குறிக்கொண்டு அந்நாமங்களை யெல்லாம் அநுஸந்தித்து இன்புற ஸ்ரீ தேசிகன் அடியார்கள் அனைவருக்கும் பாக்ய முளது.

எம்பெருமானுடைய திருநாமங்களைப் பற்றிப் பேசும்பொழுது பீஷ்மாசார்யர்

" யானி நாமானி கௌணானி விக்யாதானி மஹாத்மந: ।
ருஷிபி: பரிகீதானி...... "

என்று பாராட்டுகிறார். அவ்விசேஷணங்கள் அனைத்தும் நம் தேசிகோத்தமன் பால் நன்கு அந்வயிக்கும் என்பதை அனைவரும் உற்று நோக்கவேண்டும். தேசிகன் திருநாமங்கள் அனைத்தும் அவருடைய உயர் குணத்துடன் ஸம்பந்தித்து நிற்பதால் கௌணங்களே. அவருடைய அருளிச்செயல்கள் தோன்றிய காலம் தொடங்கி இன்றளவும் ப்ரஸித்தமாக வழங்கிவருவன வாதலால் அவை யனைத்தும் விக்யாதங்களே. குமார வரதாசார்யர், ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன், அரசாணிப்பாலை வேங்கடாத்வரீ, கந்தாடை மன்னப்பங்கார் முதலிய

ரிஷி துல்யர்களான பல பெரியோர்களால் பரிகீதங்களானவை. "வாவ ஸயா வஹூ" என்று பீஷ்மாசார்யர் பாராட்டும் ஒரு பெருமையும் இத்திருநாமங்களுக்கு உளது. அதைத்தான் இதன் தலைப்பில்காணும் பிள்ளையந்தாதிப் பாசுரம் பேசுகிறது. 'ஸஹஸ்ரநாமஸிக' என்று எம்பெருமான் விஷயத்திலும் 'ஸ்ருதி: வரா ஜமயிதநயா' என்று பெரிய பிராட்டியார் விஷயத்திலும், 'ஸர்வம் ஸஹைதந்வநிஸ்தந்வமேதி' என்று பூமிப் பிராட்டியார் விஷயத்திலும் ஸ்வாமி தேசிகன் அநுபவித்த பாவநத்வாதி குணங்களெல்லாம் ஸ்வாமி தேசிகன் திருநாமங்களுக்கும் உள என்று அப்பாசுரம் நமக்குக் காட்டிக் கொடுக்கிறது.

ஏனைய ஆசார்யர்களுக்கு வழங்கும் திருநாமங்களெல்லாம் பெரும்பாலும் அவர்களுக்குப் பிற்பட்டவர்களுடைய பக்தி பரீவாஹமாக ஏற்பட்டவை. ஸம காலத்திலே விக்யாதங்களான பெயர்களையுடைய ஆசார்யர்கள் நம் தேசிகனைத் தவிர வேறு ஒருவரும் இல்லை யென்றே சொல்லலாம். அதோடு மட்டுமில்லாமல் அந்த நாமங்களை அவரே கையாண்டிருக்கும் பெருமை தேசிகர் பெருமான் ஒருவரிடத்தே தங்கி நிற்கின்றது.

"சுரணி ஸரஸி ஸ்லியஸ்ஸ்வாஸஹஸ்ரீ கவிகயகஜமேந்த்ர:
ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர:"

என்றதுபோல் தமக்கு ஏற்பட்ட பிருத நாமாக்களைத் தாமே தமது க்ரந்தங்கள் வாயிலாக நமக்குக் காட்டிக்கொடுத்த ஆசார்யர் வேறு ஒருவருமிலர். ஆழ்வார்களில் சிலர்—முக்யமாகத் திருமங்கை மன்னன்—தமது பெருமை தாங்கிய நாமங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆயினும் அந்நாமங்களில் சில நீங்கி மற்றவை பிருத நாமாக்களாக அமையமாட்டா. ஸ்ரீ தேசிகன் விஷயத்தில் அநேக நாமங்கள் பெயர்களாகவும் இன்னும் அநேக நாமங்கள் பிருதுகளாவும் விளங்குகின்றன.

இப்படிப் பெருமை வாய்ந்த நாமங்கள் பலவற்றையும் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு, அந்நாமம் யாரால் ஏற்பட்டது? எப்பொழுது ஏற்பட்டது? எதற்காக ஏற்பட்டது? அந்த நாமம் எப்படி தேசிகன் விஷயத்தில் கேவலம் இடுகுறிப் பெயராக இல்லாமல் அந்வர்த்த நாமாவாக விளங்குகிறது? அந்நாமத்தை அவர் எங்கெங்கே எப்படி எப்படித் தமது நூல்களில் உபயோகப்படுத்தியிருக்கிறார்? என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் மட்டிலா இன்பத்தை நாம் அடைய மார்க்கமாகும்.

இம்முறையில் ஆலோசித்து இவ்வருஷம் நடந்தேறிய ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் மஹோத்ஸவத்தில் மயிலாப்பூர் கோயிலில் பல பண்டிதர்களைக் கொண்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாமாவைக் குறித்து உபந்யாஸம் செய்யப்பட்டபோது தேசிகன் திருநாமங்களின் பெருமை பலரால் நன்கு கண்டு அநுபவிக்கப்பட்டது. இத்துறையில் நம் பண்டிதர்கள் இன்னும் ஆராய்ச்சி செய்து ஸ்ரீ தேசிகன் திருநாமங்களில் பொதிந்து கிடக்கும் அழகையும் அவைகளை ஸ்வாமி கையாண்டிருக்கும் ரீதியையும் அனைவரும் அநுபவிக்கும்படி எடுத்துக்காட்ட முன் வரவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறோம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

ஆஸ்திகர்களுக்கு அறிவிப்பு

———:O:———

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா என்னும் பெயர்கொண்ட ஸபை
சென்னையில் 1947-வருஷம் அக்டோபர் மாதத்தில்
ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்
தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

இந்த ஸபையின் மூலமாகத் தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும்
நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்க ளெல்லாம் மிகவும் அழகிய முறையில்
அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

"ஸ்ரீராமாநுஜன்"

என்ற பெயரால் மாதப் பத்ரிகையும் தமிழ் தெலுங்கு உபய பாஷைகளிலும்
தனித்தனி நடத்தப்பட்டு வருகின்றது.

..........*..........

ஷை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில்

மொத்தமாக 250 ரூபாய் செலுத்துகிறவர்கள் பேட்ரன்கள்.
100 ரூபாய் செலுத்துகிறவர்கள் ஜீவிய சந்தாதாரர்கள்.
வருஷந்தோறும் (போஸ்டேஜ் உள்பட) 15 ரூபாய் சந்தா செலுத்துமவர்கள்
ஆர்டினரி மெம்பர்கள்.

ஆக இம்மூன்று வகுப்பிலும் சேர்ந்தவர்கள் மாதப் பத்ரிகைக்காகத் தனிப்பட்ட சந்தா செலுத்தவேண்டியதில்லை. மாதப் பத்ரிகை மாத்ரம் விரும்புமவர்களுக்கு

தமிழ்ப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 4.
தெலுங்கு பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 5.

══○══

மற்றும் இது ஸம்பந்தமான விவரங்களுக்கு விசேஷ விளம்பரம் தருவித்துப் பார்க்க.
கடிதப் போக்கு வரத்துகளுக்கும் மணியார்டர் அனுப்புவதற்கும் விலாஸம்:—

P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

க்ரந்தமாலா ஆபீஸ் பதிப்புகளுக்கு விரிவான காட்லாக் வரவழைத்துப் பார்க்க. உடையவர், நம்பிள்ளை, தேசிகன், மணவாளமாமுனிகள் முதலான பூருவாசாரியர்களருளிச்செய்த ஸகல க்ரந்தங்களும், அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் இயற்றிய நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்யானங்கள், ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதி ரஹஸ்ய வியாக்கியானங்கள், ஸகல ஸ்தோத்ரபாட வியாக்கியானங்கள் மற்றும் பல ஸம்ப்ரதாய நூல்கள், பலவகை உபந்யாஸ நூல்கள், சரித்திர நூல்கள் இங்கே கிடைக்கும்.

மானேஜர்,
க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்

Regd. No. M. 4437.

'SRI KRISHNA'

A Cultural monthly devoted to religious and philosophical matters and reviewing the events of the world from a spiritual point of view.

If you look for chaste method, mould, motive and substance in YOUR magazine,

SUBSCRIBE TO SRI KRISHNA:

		Annual	Monthly
High-School Students	Rs.	3.	
College Students		4.	
Non-Student Adults		5.	0-8-0
Reading-rooms and Libraries		10.	1-0-0
For those who compete for prize-essays or crossword puzzles in the magazine		15.	1-8-0

To influence the influential in Asia and abroad,

ADVERTISE IN SRI KRISHNA:

	Half Page	Full Page
Monthly	Rs. 30.	Rs. 45.
Quarterly	80.	115.
Half Yearly	150.	200.
Yearly	250.	350.

For special positions apply to the BUSINESS MANAGER.

Special commission for those who canvass subscribers (12½%) and advertisers (10%)

Editors:

PUDUKKOTTAI,
A S. RAGHAVAN.

BOMBAY,
S. NARAYAN,
I, BHAUDAJI ROAD, MATUNGA.

EVERYBODY READS IT

Apply to:—The Business Manager,
"SRI KRISHNA" EAST III, STREET, PUDUKOTTAI, [S. INDIA]

HAVE YOU READ

THE AGRICULTURAL ECONOMIST

THE ONLY INDEPENDENT JOURNAL IN THE WHOLE OF ASIA DEVOTED TO RURAL ECONOMICS AND WELFARE.

AGRICULTURE IS THE MAINSTAY OF ASIAN AND INDIAN ECONOMIC LIFE. CONTAINS OBJECTIVE AND DISPASSIONATE STUDY AND SURVEY OF ALL VITAL CURRENT ECONOMIC PROBLEMS.

APPLY FOR PARTICULARS TO

The Manager AGRICULTURAL ECONOMIST,
CHEMBUR P. O. [BOMBAY]

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street L. Kancheepuram. Edited and Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.